ண்பதென்று தாங்குதற்கரிய மயக்கமடைந்து தாயைநீங்கியபிள்ளைகள் போல் தாமரைமலர்போன்ற திருவடிகளைவணங்கி நின்றார்கள் மாயையிலேவல்ல பரமசிவன் எழுந்தருளினானென்றவாறு. (௮௭)

இங்கிவர்நின்றபின்னுமின்னருள்வாதவூரர் ... ... *
தங்களைதாழவந்ததலைவர்பின்சென்றபோதிற் .... *
பொங்கிளமுலையாள்பாகர்புரிந்தவாவரவுகாணூ ... ... *
வங்கொருகொன்றைநீழலிருந்தனராற்றைநீக்க.......... *

(இ-ள்) இங்கேஅடியார்கள்நின்றபின்னும் இனிய அருளையுடைய திருவாதவூரானவர் தமது சித்தமெல்லாம் வாழும்படி ஞானமூர்த்தமா யெழுந்தருளிய கடவுளுக்குப் பின்னேபோனபோது பொலிவுபெற்ற இளமையுள்ள ஸ்தனங்களையுடைய உமாதேவியினுடைய பாகராகிய அக்கடவுள் அன்புவைத்து இவர் வருதலைப்பார்த்து அங்கேயொரு கொன்றை விருட்சநிழலின்மேலிருந்தார் துன்பம்நீக்கும்படிக்கென்றவாறு. (௮௮)

தன்புடைக்கவரிகொண்டோர்தடங்கிரிநிரந்தமாலைப் ... ... *
பொன்படைத்தனையகொன்றைப்பொலிவுறவிருந்தபோதின்
மென்பதத்திறைஞ்சிக்கண்ணீர்விழவிழத்தொழுதுநிற்கு *
மன்பனைப்பரிவாலையாருகுவைத்தருளிச்செய்தார் ..... *

(இ-ள்) தன்பக்கத்திலே கிளைகளைக்கொண்டு ஒரு மலைவரிசையாகிய பொன்மலையைக் கொண்டிருப்பதையொத்த பூங்கொத்துகளுடனே கூடிக் கொன்றை நிழலின்மேலே பொலிவுபொருந்த விருந்தபோதில் மெல்லிய திருவடிகளின்மேலவணங்கிக்கண்ணீர்விழவிழத்தொழுது நிற்கின்ற அன்பராகியமாணிக்கவாசகரைப் பத்தியினாலே பரமசிவன் பக்கத்திலேவைத்து அருளிச்செய்தாரென்றவாறு. (௮௯)

அவ்வியமில்லார்தங்கட்கருடாமுன்னுமன்னுந் .... *
திவ்வியதலமாமிந்தச்சிரந்திடைகுருந்தநீழ... .. .. *
லெவ்வுலகெங்குமுள்ளோமாயினுமிங்குள்ளோர்கள் .. .. *
வெவ்வினையகற்றியாளவேண்டியீண்டுறைவோமென்றும் . *

(இ-ள்) மனக்கோட்டமில்லாதவர்க்கு கிருபைசெய்யமுன்னேநாமடைந்ததிவ்வியக்ஷேத்திரமாகிய சிறப்புப்பெற்றுள்ள இந்தகுருந்தநிழலின்மேல எந்தலோகத்திலும் எங்குமிருந்தேயாயினும் இங்கே யிருக்கின்றவர்களுடைய தீவினையை நீஆளும்பொருட்டு இந்த ஸ்தலத்திலே வசிப்போமென்றவாறு. (௯௰)

பொங்கொளிச்சுடினையூரிபுலம்பிசைக்குதியேயான... ... *
மங்கலச்சங்கமல்லால்வாய்ந்தபல்லியங்களியாவு .. .. *

பிங்கெமத்தாகாவோசை யடங்கிடமாதலானு... .... *
நங்குலக்கவுரிகாணு நடனவிலாதலானும்......... ....*

(இ-ள்) மிருந்த ஒளியையுடைய சுழிமுனைநாடியிடத்தில் சத்திக்கின்ற அடையாளமான மங்களகரத்தையுடைய சங்கவாத்தியமல்லாமல்மற்றவாத்தியங்களெல்லாம் இந்த ஸ்தலத்திலே நமக்காகாவாம் அதேனெனில், சத்தநீங்கிய இடமாகையினாலும், நமது பாகத்திலிருக்கும் பார்வதிகாண நடனஞ்செய்யு மிடமாகையினாலும்-எ-று. (௬௧)

ஒழுங்குடனின்னவாறிங் குணர்ந்துநற்குருந்தநீழற்......*
செழுந்தவக்குழுவினியு நங்கழல்சேவைசெய்தே... ...*
யெழுங்கனன்மடுவிற்காணில் யாவருமதனிற்சென்று ...*
விழும்பொழுதுடன்வீழாமலிவ்வுழைவிரைவினீங்கி... *

(இ-ள்) ஒழுங்காக இந்தப்பிரகாரம் அறிந்து நல்ல குருந்தமரநிழலிலே செழுமையுள்ள தபோதனர் கூட்டத்துடனே நீயும் நம்முடைய பாதத்திற் சேவைசெய்து எழுகின்ற அக்கினிமடுவிற்கண்டால் யாவரும் அதிற்போய் விழுந்தபோது உடனேவிழாமல் இந்த யிடத்திலேயிருந்து சீக்கிரத்தில்நீங்கி யென்றவாறு. (௬௨)

உத்தரகோசமங்கை யென்னுநற்பூரிற்சென்று . ...*
சித்தியங்கவையுமெய்தித் தெய்வலிங்கமேனி... ...... *
வைத்தநம்பதிகட்டமி லவையிலவணக்கிலங்கே.........*
யித்திகழ்வடிவேகாண்டி காட்டுறமெனநவின்றே... ...*

(இ-ள்) உத்தரகோச மங்கையென்னும் நம்முடைய ஸ்தலத்துக்குப் போய் அஷ்டமாசித்திகளையும் அடைந்து தெய்விகமாகிய லிங்கவடிவமாயிருக்கின்ற நம்முடைய ஸ்தலங்களிலே இந்தஸ்தலங்களை வணங்கினால் அங்கங்கும் இந்தப்பிரகாசமுள்ள வடிவேகாண்பாய் அப்படியே காட்டுவோமென்றுசொல்லி யென்றவாறு. (௬௩)

இந்நகர்வணங்கிநீங்கி யெழுங்கழுக்குன்றமென்னு... ...*
மன்னெறிப்பதியிறைஞ்சி யாண்டுநின் றீண்டுபோந்து ...*
பொன்னினம்பலத்திலெய்திப் புத்தனைவாதில்வென்ற... *
பின்னரெம்பதமேயான பெரும்பதம்பெறுதியென்றார். *

(இ-ள்) இந்தஸ்தலங்களை வணங்கிநீங்கி உயர்ந்த திருக்கழுக்குன்றமென்னும் அந்த நெடியஸ்தலத்தையும் வணங்கி அவ்விடத்திலிருந்து இங்கேவந்து சிதம்பரத்திற்குப்போய்ப் புத்தனைவாதில் வென்றபின்பு எம்முடைய பதவியான சாயுச்சியத்தைப் பெறுவாயென்றார் பரமசிவனென்றவாறு, (௬௪)

மன்னுமன்புடையார்தெய்வ வாசகம்புகலுமாறும்........ *
பன்னகப்பணிவோன்மேவும் பதிபலவணங்குமாறும் ..... *
பொன்னினம்பலத்திலெய்திப் புத்தரைவென்றிமன்றன்... *
றன்னுறுங்கமலபாதஞ் சார்தலும்பகரலுற்றாம்.. .... *

(இ-ள்) நிலைபெற்ற அன்பையுடைய மாணிக்கவாசகர் தெய்வத்தன்மையையுடைய திருவாசகஞ் சொல்லியதும், சர்ப்பாபரணத்தைத்தரித்த பரமசிவனுடைய ஸ்தலங்களை வணங்கியதும், சிதம்பரத்திற்குப்போய் புத்தரைச்செயித்துச் சபாநாயகருடைய திருவடிகளிற் சேர்ந்ததும், சொல்லத்தொடங்கினோமென்றவாறு. (௧௫)

மண்சுமந்தசருக்கம் முற்றிற்று. ஆ-திருவிருத்தம் - ௩௪௩.

திருவம்பலச் சருக்கம்.

வரந்தரவிருந்தார்தம்மை வாதவூரறைவர்போற்றிப்... ...*
பெருந்துறைநகரிலன்றிப் பிஞ்ஞகாபுலியூர்மன்றிற்.... *
பொருந்துமைமுத்தியென்று புகன்றதென்மைகவனோவென்னத்
திருந்தியதவத்தாய்கேட்டி யென்றவர்செப்பலுற்றார் .... *

(இ-ள்) தமக்கு வரங்கொடுக்க விருந்தகடவுளைத் திருவாதவூரராகிய மாணிக்கவாசகர் வணங்கிப் பரமசிவனே திருப்பெருந்துறையிலல்லாமல் புண்டரீகபுரமென்னும் பெயரினையுடைய சிதம்பரத்திற் பொருந்துதல் பரமுத்தியென்று அருளிச்செய்தது என்னவென்று விண்ணப்பஞ்செய்ய திருந்தமாகிய தவத்தையுடையவனே நீ கேட்பாயாகவென்று சொல்லத்தொடங்கினர் கடவுள்-எ-று. (௧)

இத்தலத்திடையேயீடே யெடுத்துளவிடுத்தலன்றி... ... ...*
வைத்துளவிடத்தேயந்த வேட்டுவன் வடிவங்கொள்ளும் . *
வித்தகவுனக்கிங்கன்பான் மெய்யுணர்வுரைத்தேமென்மை *
யொத்திடுஞ்சிவானுபூதி முத்தியம்பலத்திலுண்டாம்......*

(இ-ள்) புழுதன்னையெடுத்த விடத்திலல்லாமல் கொண்டுபோய் வைத்தவிடத்திலே குளவி வடிவங்கொள்ளும் அதுபோல உன்னைக்கண்ட இத்த ஸ்தலத்திலே அன்பினாலே உண்மை அறிவை யுபதேசம் பண்ணினோம் மேன்மைபொருந்திய சிவானுபூதியாகிய மோட்சம் சிதம்பரத்திலுண்டாமென்றவாறு. (௨)

இடம்பருமுடம்பின்மூலத் தெழுந்தநற்சுழிமுனைநாடி... ...*
யுடன்கிளரொளியேயாக வொளியிலஞ்செழுத்துமொன்றாய்
நெடுங்குழலோசையாகி நிலவுமவ்வோசைபோயங்... ...*
கடங்கியவிடமேயென்று மாமம்பலமதாகும்.............*

(இ-ள்) விசாலமாகிய தேகத்திலே மூலாதாரத்திநின்றும் எழுந்த நல்ல சுழிமுனைநாடியுடனே நிறைந்த ஒளியாய், அந்த ஒளியிலே பஞ்சாக்ஷரமுமொன்றாய், நெடிய குழலோசையாய்ப் பிரகாசம்பொருந்திய அந்தவோசைநீங்கி அடங்கியவிடமே நாள்தோறும் நாம் ஆடுகின்ற சிதம்பரமாகு மென்றவாறு. (௩)

எண்டரும்பூதமைந்து மெய்தியநாடிமூன்று...... ... ...*
மண்டலமூன்றுமாகி மன்னியபுணர்ப்பினாலே...... ......*
பிண்டமுமண்டமாகும் பிரமனேனைவராகக்...... ... ...*
கண்டவர்நின்றவாறு பிரண்டினுங்காணலாகும்... ... ...*

(இ-ள்) எண்ணிக்கையைத்தருகின்ற பிருதுவி-அப்பு-தேயு-வாயு-ஆகாசமென்று சொல்லப்பட்ட பூதங்களைந்தும் இடைபிங்கலை சுழிமுனையென்னும் நாடிகள்மூன்றும் அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம், என்னுமண்டலங்கள் மூன்றும்ஆகி நிலைபெற்றச் சம்பந்தத்தாலே பிண்டமுமண்டமாம்-பிர்மா-விஷ்ணு உருத்திரன்-மகேசுரன்-சதாசிவனென்று சொல்லுகின்ற ஐந்து வடிவமாகக் கண்டவர்கள் நின்றவிதமும் இவ்விரண்டுவிதத்திலுங் காணலாமென்றவாறு. (௪)

ஆதலாலிந்தவண்டத் தறிவரும்பொருளாயென்றாந்... ...*
தீதிலாமூலநாடிற் றிகழ்சிவலிங்கமேனி... ... ...*
மீதிலாமற்றநாத வெளியின்மேலொளிமன்றக்குக்........*
காதலான்மடவாள்காணக் கருத்துறநிருத்தஞ்செய்வோம் . *

(இ-ள்) ஆகையினாலே இவ்வண்டத்தில் அறிதற்கரியபொருளாகி ஒன்றாங் குற்றமில்லாத மூலத்தை நாடிப்பார்த்தால், பிரகாசியாநின்ற சிவலிங்கமேனியாயிருக்கு மேலாகிய அந்த நாதவெளியின்மேல் ஒளியாயிருக்கின்றது சபை அங்கே ஆசையால் உமாதேவிகாண மனம்பொருந்த நிருத்தஞ்செய்வோ மென்றவாறு. (௫)

அந்தநன்னடமேதென்னி லெத்தொழிலடத்தலாகும்... ...*
பத்தமகற்றுமீந்தப் படிவமுமதுவேயாகும்.............*
வந்துலகத்தில்யாருங் காண்பதோர்வழுவாமூர்த்தி ... ...*
தந்தருளிக்குந்தெய்வத் தலமுமத்தலமேயாகும்... ......*

(இ-ள்) அந்தநடனம் எதென்றால், சிருஷ்டி-ஸ்திதி-சங்காரம்- திரோபவம்-அநுக்கிரகமென்று சொல்லப்பட்ட பஞ்சகிருத்தியத்தை நடத்துவதாகும் பாசத்தளையை யறுக்கின்ற இந்தவடிவமும் அதுவேயாகும், உலகத்திலே யிருக்கின்றவர்கள் யாவர்வந்து தெரிசித்தாலும், பரமுத்தியைக் கொடுத்து கிருபையைத்தருகின்ற தெய்வஸ்தலமும் அந்தச்சிதம்பரமேயாகுமென்றவாறு. (௬)

தாவரும்பணிலநேமி தரிப்பவர்பிரமனொன்போ... ... ...*
ரியாவரும்புலிபாம்பென்னு மிருவரும்புரத்திலுண்டா... *
மூவருந்தெய்வமூவா யிரவருமுனிவர்நாமுந்......... ...*
தேவருந்தொழுதுபோற்று மெல்லையத்தில்லைமூதூர் ... *

(இ-ள்) தாவுதற்கரிய சங்குசக்கரந்தரிப்பவராகிய மகாவிஷ்ணுவும் பிரமதேவரும் பதஞ்சலிவியாக்கிரமபாதரும் திருபுராதிகளும் தெய்வத்தன்மையுள்ள தில்லைமூவாயிரவரும் நாற்பத்தெண்ணாயிரமுனிவரும் முப்பத்துமுக்கோடி தேவர்களும் போற்றும் எல்லையையுடையது அந்தத்தில்லைமாநக ரென்றவாறு. (௭)

மற்றிவைதெளிவாயென்று பணிந்தெதிர்வணங்கிநிற்பார் *
நெற்றியினீறுசாத்தி நீற்றியென்றகலநில்லார்... .. .. *
சுற்றிடஞ்சென்றார்பின்னு மிங்கிவர்தன்மைகண்டு...... ..*
கற்றையஞ்சடையார்நின்று கண்ணருள்செய்துபோந்து *

(இ-ள்) இவைகளையெல்லாந் தெளிந்துகொள்ளுமென்று பணிந்து-எதிரேவணங்கி-நிற்கின்ற மாணிக்கவாசகருடைய நெற்றியிலே விபூதிதரித்து நில்லென்று கடவுளானவர் நீங்குதலும் நில்லாதவராய்க் கொஞ்சதூரம்போனார் மறுபடியும் இவருடைய தன்மையைக்கண்டு பரமசிவனானவர் நின்று கிருபைசெய்துபோயென்றவாறு. (௮)

கண்ணெதிர்கடக்குமாறு கண்டுளங்களித்துநிற்கும்........ *
புண்ணியர்காணமுன்னர் மறைந்தனர்புலியூராயர்... ...*
துண்ணெனவிரக்கமெய்தித்தொழுதுகைதலைமேற்கொண்டு
நண்ணருமன்பர்கூட்ட நணுகினர்வாதவூரர்.................*

(இ-ள்) கண்ணெதிரே நடப்பதைக்கண்டு மனங்களித்துநிற்கின்றபுண்ணியராகிய மாணிக்கவாசகர் காணும்படி சபாநாயகர் எதிரேமறைந்தார் அதுகண்டு அச்சங்கொண்டு இரக்கமுற்றுவணங்கிக் கையைச்சிரசின்மேல்வைத்துக்கொண்டு பொருந்துதற்கரிய அடியார்களுடைய கூட்டத்தைப்பொருந்தினார் திருவாதவூர ரென்றவாறு. (௯)

அருந்தவமகலா நெஞ்சத் தன்பருந் தாமுமந்தத் *
திருந்திய குருந்தின் கீழே தெய்வபீடிகையுஞ் செய்து *
வரந்தரு செய்யபாத மலர்வகுத் திறைஞ்சியாங்கே *
யிருந்தவ னிருந்த நாளி லெய்திய தியம்பலுற்றாம் *

(இ-ள்) அரியதவத்தைநீங்காத மனத்தையுடைய அடியார்களும் மாணிக்கவாசகரும் அந்தத்திருத்தமாகிய குருந்தநீழலின்கீழ் தெய்வத்தன்மையுடைய ஒருபீடஞ்செய்து அதன்மேலே வரத்தைத்தருகின்ற சிவந்த தாமரைமலர்போலுந் திருவடிகள்செய்து வணங்கி அங்கிருந்தார் இருந்தநாளிலே நடந்தகாரியத்தைச் சொல்லத்தொடங்கினேமென்றவாறு. (௰)

வெண்பிறை முடித்த வேணி விண்ணவரன்பிலாத *
பண்பின ரெனினுந் தன்னைப் பாடினார்க் கிரங்குமென்றே *
யெண்பெறு நமச்சிவாய வாழ்கவென் றெடுத்து நாதன் *
வண்பதம் புகழ்ந்து ஞான வாசகம் புகலலுற்றார் *

(இ-ள்) வெள்ளிய மூன்றாம்பிறையைத்தரித்த சடாபாரத்தையுடைய கடவுளானவர் அன்பில்லாதவர்களேயானாலும் தன்னைப் பாடினவர்களிடத்தில் இரக்கஞ்செய்வாரென்று நினைத்து எண்ணுதல்பெற்ற நமச்சிவாய வாழ்கவென்றெடுத்து நாதனாகிய கடவுளது வளத்தையுடைய திருவடியைப்புகழ்ந்து ஞானவாசகமாகிய திருவாசகம் சொல்லத்தொடங்கினாரென்றவாறு. (௰௧)

சொற்பதங்கடந்து நின்ற சோதிவந்தருளை நல்கு *
மற்புதமறியேனென்று மதிசயங்கண்டாமென்று .. [றுஞ்
மெற்பொலிசடையாய் நெஞ்சங் குழைத்தனை யென்னையென்
சிற்பரன்றனது பாதஞ் சென்னியின் மன்னுமென்றும் *

(இ-ள்) சொல்லுகின்ற பதங்களைக்கடந்துநின்ற கடவுளானவர்வந்து கிருபையைத்தருகின்ற அற்புதமறியேனேயென்றும் அதிசயங் கண்டாமேயென்றும் ஒளிவிளங்குகின்ற சடையையுடைய கடவுளே! யென்னை மனங்குழைத்தாயென்றும் பரமசிவனுடையபாதஞ்சென்னியில் மன்னுமென்று மென்றவாறு. (௰௨)

ஐயனே நின்னைக்காண வாசைப்பட்டேனென்று *
முய்கிலேன் வாழேனென்று முனக்கடைக்கலமேயென்றுஞ் *
செய்யுமாறறியேனந்தோ செத்திலேனென்றும் பொய்யர்ப்
பொய்யனே நின்பொற்பாதம் புணருநாளென்றோவென்றும்.

(இ-ள்) ஐயனே நின்னைக்காண ஆசைப்பட்டேனென்றும் பிழையேன் வாழ்கிலேனென்றும் உனக்கடைக்கலமென்றும் செய்யுமாறறியேன்

ஐயோசெத்திலேனென்றாய்? பொய்யர்க்குப்பொய்யனே! நின்பாதம் புணருநாளென்றோவென்று மென்றவாறு. (௰௩)

ஆதரித்தழைக்கிலங்கே யதெந்துவென்றருளாயென்று...*
போதமிக்குடையபாட லிவையிவைபுகன்றபின்னர்... ...*
மாதிரத்தெவருப்போற்ற வருந்திருவார்த்தையெண்ணுந் *
தீதறச்சிறந்தவெண்பா திகழெழுநான்குமோதி........ ...*

(இ-ள்) ஆதரித்தழைக்கில் அதெந்துவே யென்றருளாயென்றருட்பத்தும் ஞானமிகவுடைய பாடல்கள் இவைகளிவைகள் அருளியபின்பு எட்டுத்திக்கிலுள்ளவர்களும் வணங்குகின்ற திருவார்த்தையும் எண்ணப்பதிகமும் குற்றமற்ற சிறந்தவெண்பா இருபத்தெட்டும் விளங்கச்சொல்லி யென்றவாறு. (௰௪)

இயல்புடன்மொழியும்பள்ளி யெழுச்சியேசறவுநெஞ்சத்*
தயர்வறவுணர்க்குமின்னே ரனையபூங்கழல்களென்று... .. *
உயிருண்ணியெனுநற்செய்யுள் பிரார்த்தனையோங்குநீதி...*
வியனெடுங்கூடற்பாண்டி விருத்தமெய்த்தமிழுங்கூறி..*

(இ-ள்) இயல்புடனே சொல்லுகின்ற திருப்பள்ளியெழுச்சியும் திருவேசறவும் மனத்தின்வருத்தம் நீங்கச்சொல்லுகின்ற மின்னேரனைய பூங்கழல்களென்னு மந்தமாலையும், உயிருண்ணிப்பத்தும், பிரார்த்தனைப்பத்தும், உயர்ந்தநீதியாகிய அதிசயமுள்ள நெடிய மதுரையினுடைய திருப்பாண்டிவிருத்தமென்னுந் தமிழ்ப்பாடலும்சொல்லி-எ-று. (௰௫)

(வேறு.)

மருவுந்தொண்டருடன்கூடிவைகிச்சிலநாட்செல்லுமுதற்[டு
பரமன்சொல்லும்படியேபின்பயிலும்பொய்கைத்தழல்கண்
உருகுந்திருவஞ்செழுத்தோதிக்காணக்கிளருங்கனன்மீது *
விரவும்பேரன்புடையார்களெல்லாஞ்சென்றுவீழ்ந்தார்கள்.

(இ-ள்) தங்கியிருக்கப்பட்ட அடியார்களுடனே வாசஞ்செய்து, சிலநாள்செல்ல அதற்குமுன்னே பரமசிவனனுக்கிரகித்தபடியே பின்புபயிலுகின்ற தடாகத்திலே அக்கினியைக்கண்டு நினைக்கின்ற அழகிய பஞ்சாக்ஷரத்தைச் செபித்துக்காணும்படிப் பிரகாசியாநின்ற அக்கினியிலே கலந்திருக்கின்ற மிகுந்த அன்பையுடைய அடியார்களெல்லாம்போய் மூழ்கினார்களென்றவாறு. (௰௬)

வீழ்ந்தபோதிற்புலியூரர்விடைமேற்றோன்றிக்கவுரியுடன் [தனு
சூழ்ந்தக்கிலைமையோர்மலர்சிந்தித் தொழவிண்ணிடையேதோன்று

மாழ்ந்ததடத் துட்கனல்மூழ்கு மன்பரடங்கத்துயர்நீங்கி... ... *
வாழ்ந்துவணங்கிக்கணநாதர் வடிவாய்த்திருமுன்வந்தார்கள்... *

(இ-ள்) விழ்ந்து முழுகினபோது நடேசமூர்த்தியானவர் இடபவாகனத்தின்மேலேறி உமாதேவியுடனே முப்பத்துமுக்கோடி தேவர்களுஞ் சூழ்ந்துகொண்டு அவ்விடத்திலே மலரைத்தூவி வணங்க ஆகாயத்திலெழுந்தருளிய மாத்திரத்தில், ஆழம்பொருந்திய தடாகத்திலிருக்கின்ற அக்கினியில் மூழ்கிய அன்பர்கள் தங்கள் துக்கமெல்லாம் நீங்கிவாழ்ந்து வணக்கஞ்செய்து சிவகணநாதர்களாய் வடிவுகொண்டு பரமசிவனெதிராக வந்தார்களென்றவாறு. (௰௭)

துரியத்தலையிற்பயில்வாருந் தொழுதங்கெழுவார்முகநாடி *
யொருசற்றகலாதவர்நீரிங் கொழியத்தனிநாமெய்தியதுங் *
கரையிற்றிரைபோய்விழ்வீசுங் கழுநீர்வாசங்கமழ்வாவி... *
யெரியிற்புகுவீரென்றதுவும் யாதோவெனிலிங்கிதுவாகும் *

(இ-ள்) துரியத்தின்முடிவின் விளங்கியகடவுளும்வணங்கியெழுகின்ற அடியார்களுடைய முகத்தைப்பார்த்துக் கொஞ்சநேரமாகிலும் நீங்காதவராகிய நீர் இங்கேநீங்கத் தனியேநாம்போனதும் கரையிலே அலைகள் போல் மோதும்படி வீசுகின்ற செங்கழுநீர்வாசங்கமழ்கின்ற திருக்குளத்தில் அக்கினியிலே மூழ்குவீரென்று சொல்லியதும் என்னகாரணமோவென்றுகேட்டால் இதுவாகுமென்றார் என்றவாறு. (௰௮)

(வேறு.)

உத்தமனென்றுந்திருவாத வூரனைமன்றும்புலியூரிற் ...... *
புத்தரைவெல்லும்படிநாமிப் புவிமிசைவைத்தோமியாமேகிற் *
சித்தமயர்ந்தேதுயர்கூருஞ் செய்தியனுமென்பதுதேரா *
வித்தலமீதேசிலநாளிங் கெம்முடன்வாராதிருமென்றோம் *

(இ-ள்) உத்தமனென்கின்ற திருவாதவூரனை நிலைபெற்ற சிதம்பரத்திலே புத்தரைவாதில் வெல்லும்படி நாம்இந்தப் பூமியின்மேல் வைத்தோம் நாம்நீங்கினால் மனம்நொந்து துன்பமடைவானென்பது தெரிந்து உங்களையும் இந்தஸ்தலத்திலே சிலநாள் எம்முடன் வாராதிருப்பீரென்று சொன்னோமென்றவாறு. (௰௯)

மலமகல்பவரும்புவிமீதே மானிடவடிவத்தனையெய்திச்... *
சிலபகலெனினும்பயில்காலைச் சேர்தருமலவாதனையென்றே *
பலமலர்கமழுந்தடமீதிற் பரவருஞானவனல்சேர்வித் ... *
திலதெனநீயுஞ்சடம்வேவித் திவ்வுடலீந்தேமிந்நாவில்... *

(இ-ள்) ஆணவம்-மாயை-காமியமென்னும் மலநீங்கினவர்களும் பூமியி

ன்மேலே மானிடவடிவங்கொண்டு சிலநாளாயினும் இருக்குங்காலத்தில் மறுபடியும் மலவாசனைசேருமென்று அனேகமலர்கள் வசிக்கின்ற தடாகத்திலே சொல்லுதற்கரிய ஞானாக்கினியைச் சேர்வித்துப் பொய்யாய்த் தோன்றிய மாயாதேகத்தை வேவச்செய்து இந்ததேகத்தை இந்நாளிலே கொடுத்தேமென்றார் பரமசிவன் என்றவாறு. (௨௰)

என்றுவிளம்பிக்கணநாத ரொக்கனுமகலப்புலியூரின் ... ... *
மன்றுவிளங்கப்பயில்வாரும் வானின்மறைந்தாரவ் வெல்லைத்
அன்றியஞானச்சிவநாமச் சொற்றமிழ்ச்சொல்வார்வேறாகச் *
சென்றொருகொன்றைச்செழுநீழற் றிகழவிருந்தார்சிவயோகம்

(இ-ள்) இப்படியென்று அருளிச்செய்து கணநாதர்கள் எவ்விடத்திலும்நெருங்கிச் சிதம்பரத்திலே கனகசபைவிளங்க நிருத்தஞ்செய்கின்ற சபாநாயகரும், ஆகாயத்தில் மறைந்துவிட்டார் அப்போது நிறைந்தஅறிவைத்தருகின்ற சிவநாமத்தையுடைய திருவாசகத்தமிழ் சொல்வாராகிய மாணிக்கவாசகர் வேறாகப்போய்ச் செழுமையுள்ள ஒருகொன்றைமரநீழலிலே பிரகாசத்துடனே சிவயோகஞ்செய்திருந்தாரென்றவாறு. (௨௧)

அன்பரழற்கேபுகுமாறு மையர்விடைக்கேவருமாறு ...... *
முன்புதமக்காமுறுவெய்தி முன்னவனைத்தொழுமாறும் .... *
பொன்பொதுவிற்கேயன்பானர் புகுவதுமெல்லாமொருகாலத் *
தின்புறுமெய்ப்போதகயோகத் தியல்பொடுகண்டாரென்செய்தார்

(இ-ள்) அடியார்கள் அக்கினியிலே புகுந்தவிதமும் கடவுள் இடபவாகனத்தின்மேல் வந்தவிதமும் முன்னே தமக்குவேண்டியவடிவங்கொண்டு கடவுளினுடைய திருவடியை வணங்கினவிதமும் இனிக்கனகசபையிலே தான்போயடைவதும் ஆகிய இவையெல்லாம் ஒருகாலத்திலே இன்பமிகுந்த உண்மைஞானத்தைத் தருகின்ற சிவயோகத்திலே சுபாவத்துடனே மாணிக்கவாசகர் அறிந்துகொண்டார் பின்பென்செய்தாரோவெனி லென்றவாறு. (௨௨)

செங்கைகுவித்தார்விழிநீராற் சிந்தினரெந்தாய்வந்தாய்பின் ... *
னெங்கொளித்தாயெனமாலுற் றெய்தினர்பொய்கைக்கரைமீதிற்
கங்கைமுடித்தார்விடையேறிக் கண்ணுறநண்ணுந்தலமோவென் *
றங்கணிலத்தேபோய்வீழ்வுற் றழுதழுதந்தோவெனநொந்தார் *

(இ-ள்) சிவந்தகையைக்குவித்தார் கண்களாலே ஆனந்தபாஷ்பங்களைச்சொரிந்தார் எமதுபிதாவாகிய கடவுளே வந்து பின் எங்கேயொளித்தாயென்று மயக்கமடைந்து பொய்கைக்கரையில்வந்து கங்கையைத் தரித்த பரமசிவன் இடபவாகனத்திலேறிக் கண்ணெதிரே எழுந்தருளிய

ஸ்தலமோவென்று அழகிய இடத்தையுடைய பூமியிலேபோய் விழுந்து அழுதழுது ஐயோவெனநொந்தார் மாணிக்கவாசகரென்றவாறு. (உ௬)

[வேறு.]

அன்னைநிகர்ப்பீரென்னையொழித்தே யன்பாளர்...... .. *
பொன்னடிபெற்றேபொய்கையழற்கே புகலாமோ.... ... *
மின்னுருவத்தீர்நும்மருள்கூடா வினையேனுக்...... ..... *
கின்னலளித்தீரெங்ஙனொளித்தீ ரெனநொந்தார்... .... *

(இ-ள்) தாய்க்குச்சமானமானவரே என்னைநீக்கித்தமதடியார்கள்பொன் போன்ற பாதத்தைப்பெற்றுத் திருப்பொய்கையிலே யுண்டாகிய அக்கினியிலே மூழ்கலாமா பிரகாசிக்கின்ற வடிவையுடையவரே உமதுதிருவடியைச்சேருதலில்லாத தீவினையையுடையேனாகிய அடியேனுக்குத் துன்பத்தைக்கொடுத்துஎங்கேஒளித்தீரென்றுநொந்தார்மாணிக்கவாசகர்-எ-று

[வேறு.]

அந்நிலைதெளிந்துபொய்கை யகன்றுயர்குருந்தநீழற் ...*
பன்னருமறைகள்காணாப் பதமலர்பற்றிவீழ்ந்து ... *
மன்னியதலத்துள்ளோர் வல்வினைப்பிறவிமாள ... ...
மின்னருட்சதகமெய்தானரும்பியென்றெடுத்துச்சொன்னார்

(இ-ள்) அந்த நிலையைத்தெளிந்து திருப்பொய்கையைவிட்டு நீங்கி உயர்ந்த திருக்குருந்தநிழலிலே பன்னுதற்கரிய வேதங்கள்காணாத திருவடிமலரைப்பற்றி வீழ்ந்து நிலைபெற்றபூமியிலுள்ளவர்களுடைய தீவினைக்குக் காரணமாகிய பிறவிமாளும்படி இனிய அருளையுடைய திருச்சதகம்மெய்தானரும்பியென் றெடுத்துச்சொன்னார்மாணிக்கவாசகர்-எ-று.

இத்திறங்கூறியாங்கே புலம்பிநின்றிரங்குமெல்லை.........*
நித்தனன்றுரைத்தநீர்மை நெஞ்சினுணினைந்துபின்ன ...*
ரத்தலத்திறைஞ்சியெங்கோ னருட்பெருவிடைபெற்றேகி*
யுத்தரகோசமங்கை யூரினிற்சென்றுபுக்கார்...............*

(இ-ள்). இந்தப்பிரகாரஞ்சொல்லி அங்கே புலம்பிநின்று இரங்குஞ் சமயத்திற் கடவுளன்றருளிச்செய்ததை மனதிலே நினைந்துபின்பு அந்த ஸ்தலத்திலே வணங்கிக் கடவுளுடைய செலவுபெற்றுக்கொண்டுபோய்த் திருவுத்தரகோசமங்கையென்னும் ஸ்தலத்துக் கெழுந்தருளினார் மாணிக்கவாசகரென்றவாறு. (உ௭)

சடையவர்க்கோயிலெய்தித் தம்மைவந்தடிமைகொண்ட...*
வடிவதுகாணாராகி மயங்கிவெய்துயிர்த்துவீழ்ந்து... ...*

விடுதிகோலென்னையென்று நீத்தல்விண்ணப்பமென்றுந் *
தொடைகெழுபாடலோதக் காட்டினர்தொல்லைமேனி ...*

(இ-ள்) திருவுத்தரகோச மங்கையிலே ஜடாபாரத்தையுடைய பரமசிவனெழுந்தருளியிருக்கின்ற கோயிலுக்குப்போய்த் தம்மை வந்தடிமைகொண்ட திருவுருவைக் காணாதவராய் மயக்கமடைந்து பெருமூச்சுவிட்டுக் கீழேவிழுந்து என்னை விட்டுவிடுகின்றாயோவென்று நீத்தல்விண்ணப்பமென்னும் பாடல்சொல்லப் பழையதிருவுருவைக் காண்பித்தாரென்றவாறு. (உஎ)

அன்னலையமுதையங்கே கண்டுகொண்டிறைஞ்சிச்சின்னாள்...*
அந்நகரிருந்துதங்கோ னருண்மொழிப்படியேசென்று *
தன்னிகரில்லாத்தெய்வத் தலம்பலவணங்கிநீங்கி ....*
சென்னிநன்னாடிலெய்தித் திருவிடைமருதூர்சேர்ந்தார் *

(இ-ள்) கரும்பையும் அமிர்தத்தையுமொத்த கடவுளை அங்கே கண்டுகொண்டு வணங்கிச் சிலநாள் அந்த ஸ்தலத்திலிருந்து நமதுகடவுள் சொற்படியேபோய்த் தனக்கு நிகரற்ற அநேகந் தெய்வஸ்தலங்களை வணங்கி நீங்கிச் சோழநாட்டுக்குப்போய்த் திருவிடைமருதூரிற் சேர்ந்தார் மாணிக்கவாசகர்-எ-று. (உஅ)

அப்பதிதொழுதபின்ன ரன்புடனாரூரெய்திச் ....*
செப்பருமலர்த்தாள்போற்றித் திகழ்திருப்புலம்பலோதி *
யெய்ப்பறவிறைஞ்சியண்ண லியம்பியபதிகளெல்லாந் ...*
தப்பறவணங்கிநீங்கித் தடமதிற்புகலிசேர்ந்தார் ... ...*

(இ-ள்) அந்த ஸ்தலத்தை வணங்கினபின்பு அன்புடனே திருவாரூருக்குப்போய்ச் சொல்லுதற்கரிய தியாகராயருடைய திருவடித்தாமரைகளைத் துதித்துப் பிரகாசிக்கின்ற திருப்புலம்பலென்னும் பாடல்களைச் சொல்லித் தமது இளைப்புநீங்க வணங்கிப் பரமசிவனால் அனுக்கிரகம் பண்ணப்பட்ட ஸ்தலங்களெல்லாந் தப்பாமல் வணங்கிநீங்கி விசாலம் பொருந்திய மதில்சூழ்ந்த சீர்காழியிற்சேர்ந்தார்- எ-று. (உகூ)

குன்றெனவயங்குங்கோயிற் கோபுரவாயினீங்கிச்... ... ...*
சென்றுயர்கயிலையான செய்திகண்டிரங்குமெல்லை... ...*
மன்றிடைநடித்தபாத மலரடிபிடித்துக்கொண்டு ....*
பின்றிகழ்சடையோன்முன்னர்ப்பிடித்தபத்தருளிச்செய்தார்

(இ-ள்.) மலையென்று சொல்லும்படிப் பிரகாசிக்கின்ற ஆலயத்தினுடைய திருக்கோபுர வாசலைக்கடந்து நீங்கிப்போய் அது கயிலாசமாகிய செய்தியைக்கண்டு வணங்கும்பொழுது சிற்சபையிலே திருத்தகு

செய்த திருவடித்தாமரையைப் பிடித்துக்கொண்டு பின்புறத்திற் பிரகாசிக்கின்ற சடாபாரத்தையுடைய கடவுளின்முன்னே பிடித்த பத்தென்பதை அருளிச்செய்தார் மாணிக்கவாசக ரென்றவாறு. (௫௰)

தொல்வினைப்பகைமையுள்ளா ரியாவருந்தொழுதாலின்று ......*
வெல்வரப்பகையையென்று விருப்புடன்சிலநாள்வைகி ...*
மல்குமத்தலத்தைநீங்கி வண்கழுக்குன்றிலன்பாற்... ... .*
செல்வதற்கிசைந்துதில்லைத் திசைக்குறித்திறைஞ்சிப்போகி ... ...*

(இ-ள்.) பழவினைப் பகையுள்ளவர்கள் வணங்கினால் யாவரும் அதனை வெல்வார்களென்று அந்தஸ்தலத்திலே விருப்புடனே சிலநாள் வாசஞ்செய்து அந்தஸ்தலத்தைவிட்டு வளத்தையுடைய திருக்கழுக்குன்றத்தில் அன்பாய்ச்செல்வதற்குச் சம்மதித்துத் தில்லைநகரைத் திசைக்குறித்து வணங்கிப்போ யென்றவாறு. (௫௧)

(வேறு.)

உத்தரநெடுந்திசையி லேகியொருகுன்று... ... ...*
முத்தநதிசூழுமது குன்றினைவணங்கா... ... ... *
வத்தலமகன்றதுய ரருட்டுறையிதென்றே... ... ...*
மெய்த்தவர்களெண்ணியுறை வெண்ணெயிலடைந்தார்... *

(இ-ள்) நெடிய வடக்குத்திசையிலேவந்து பிரகாசக்குறையாத மணிமுத்தாறுசூழ்ந்த விருத்தாசலத்தைவணங்கிப் பின்பு உயர்ந்த திருவருட்டுறையென்று பெரியோர்கள் நினைத்துவசிக்கின்ற திருவெண்ணெய் நல்லூரிற்சேர்ந்தார் மாணிக்கவாசக ரென்றவாறு. (௫௨)

அந்தகர்வணங்கியபி னன்புடனகன்றே ... ...*
நன்னர்வழிசென்றுநடு நாடுமுயர்காடுக்... ... ... *
கொன்னிபமடங்கலுறை குன்றமுமிகந்தே... ... ...*
மன்னுமருணைபுரி மருங்கணையவந்தார்... ... ... *

(இ-ள்) அத்தஸ்தலத்தை வணங்கியபின்பு அன்புடனேநீங்கி நல்லவழியிலேபோய் நடுநாட்டையும் உயர்ந்தகாட்டையும் அச்சத்தைத் தருகின்ற யானையும் சிங்கமும்வசிக்கின்ற மலைகளையுங்கடந்து நிலைபெற்ற திருவண்ணாமலைக்குச் சமீபத்தில்வந்தார் மாணிக்கவாசகர் என்றவாறு. (௫௩)

மாடமொடுகோபுரமு மன்னுமணிமுத்தஞ் ... ... *
சூடுமதிலும்பெரிய தோரணமுகப்பு ... ...*
நீடுகமுகாடவி நெருங்கியுளதண்கா ... ... *
ஆடியர்தல்கண்டுவகை கொண்டுதொழுதய்த்தார்... ...*

(இ-ள்) உப்பரிகைகளும், கோபுரங்களும், நிலைபெற்றரத்தினங்களும், முத்துக்களும், பதித்தமதில்களும், பெரிய தோரணங்களையுடைய முகப்பும், நீடியகமுகங்காடுகளும், மருங்கியுள்ள குளிர்ந்த சோலைகளினுடைய கிளைகள் உயர்ந்திருதல்கண்டு-மகிழ்ச்சிகொண்டு- வணங்கிப்பிழைத்தார் மாணிக்கவாசக ரென்றவாறு. (௫௪)

அன்றிருவர்தேடவழ லானதொருவெற்பாய் ... ... *
நின்றவடிவோமண நிறைந்தபெருவாழ்வோ .. ..*
வென்றுமலையண்ணலை யிறைஞ்சியருள்கொண்டே ... *
சென்றருணையாகிய செழும்பதிபுகுந்தார் ... ... *

(இ-ள்) அன்று பிர்ம்மா-விஷ்ணுக்கள்தேட அக்கினிமலையாய்நின்றவடிவோ? அல்லது-மணத்திலேநிறைந்த பெரியவாழ்வோவென்று அண்ணுமலையைவணங்கிக் கிருபைகொண்டு செழுமையுள்ள திருவருணைமாநகரத்திற்புகுந்தார் மாணிக்கவாசகர்-எ-று. (௫௫)

(வேறு.)

சோலையுமதிலும்பல்பூந் தோரணமறுகுந்தெய்வச் ... ...*
சாலைகள்பலவுநீங்கிச் சந்நிதிமறுகிற்சென்று ... ... *
மாலையும்பாப்புந்திங்கள் மத்தமுமுடியில்வைத்தோ ...*
னாலயமிறைஞ்சிக்கண்டார் தம்மையன்றாண்டமேனி. ... *

(இ-ள்.) சோலைகளும், மதிலும், பசிய பூந்தோரணங்களையுடைய வீதியும், அனேக தெய்வத்தன்மையுள்ள சாலைகளும், நீங்கிச் சந்நிதிவீதியிற்போய் மலர்மாலையும், மூன்றாம்பிறையும், சர்ப்பமும், ஊமத்தைமலரும், திருமுடியின்மேல்வைத்த அண்ணாமலையாருடைய ஆலயத்தை வணங்கித் தம்மையன்றுவந்தாண்ட திருவுருவைக்கண்டார் மாணிக்கவாசகர் என்றவாறு. (௫௬)

மாலுடன்பிரமன்றேவர் வந்துனக்கடிமையென்றென் ...*
றோலிடுபொழுதிலால முண்டிருள்கண்டபோற்றி ... *
மேலிடும்பவநோய்தீர விண்ணவர்மண்ணோர்பச்சைப் .. *
பாலுடன்கலந்துட்கொள்ளும் பனிமலைமருந்தேபோற்றி *

(இ-ள்) மகாவிஷ்ணுவும்- பிரமதேவனும் - தேவர்களும்வந்து உனக்கடைக்கலமென்று முறையிடும்போதில் ஆலகாலமுண்டிருண்ட கண்டத்தையுடையவனேபோற்றி, அதிகரிக்கின்ற பிறவிநோய் நீங்கத் தேவரும்-மனிதரும்-பசும்பாலுடன் அல்லது- உமாதேவி பாகத்துடனேகலந்துட்கொள்ளுகின்ற குளிர்ச்சியுள்ள மலைமருந்தேபோற்றி-எ-று. (௫௭)

நெடியவன்கேழலாகி நீணிலமகழ்ந்துங்காணா ... ...*
வடிகளென்றலைமேல்வைத்த வருட்பெருங் கடலேபோற்றி*
படியிடம்புரக்குமுண்ணா முலையெனும்பச்சைமேனிக் ...*
கொடியிடங்கொண்டசெம்பொற்குன்றமேபோற்றிபோற்றி

(இ-ள்) மகாவிஷ்ணுவராகமாய் நீண்ட பூமியைப்பிளந்துங்காணாத திருவடிகளை என்றலைமேல்வைத்த பெரிய கிருபாசமுத்திரமேபோற்றி, பூவுலகத்தை ரட்சிக்கின்ற உண்ணாமலையென்னும் பச்சைமேனியையுடைய கொடியை இடதுபாகத்திற்கொண்ட சிவந்த பொன்மலையேபோற்றி போற்றி என்றவாறு. (௫௮)

வென்றியங்கன்னிமேதிச் சென்னிவிக்கிரமன்றன்னைக் .....*
கொன்றதன்பாவந்தீரக் குறித்திடவருள்வாய்போற்றி .... *
யன்றுவந்தென்னையாளு மணியணாமலையாய்போற்றி ......*
யென்றுதம்பரிவாலேத்தி யிறைஞ்சியக்குறையுநாளில் ...*

(இ-ள்) வெல்லுதல்செய்த துர்க்கையானவள் மகிடாசுரனைக்கொன்ற பாவந்தீர நினைத்துப்போற்ற அருள்செய்பவனேபோற்றி, அன்றெழுந்தருளிவந்து என்னை அடிமைகொண்ட அணியண்ணாமலையானே போற்றியென்று அன்பினாலே ஏத்திவணங்கி அங்கேயிருக்கின்றநாளில்-எ-று.()

மாதர்கொண்மாதரெல்லா மார்கழித்திங்கடன்னி ... ...*
லாதிரைமுன்னீரைந்தே யாகியதினங்களெல்லா... ... *
மேதகுமனைகடோறு மழைத்திருள்விடிவதான ... ...*
போதிவர்தம்மிற்கூடிப் புனற்றடமாடல்செய்வார் ... *

(இ-ள்) அழகினைக்கொண்ட எழுவகைப் பருவமங்கையர்களெல்லாம் மார்கழிமாதத்தில் திருவாதிரைக்குமுன்னே பத்துத்தினங்களிலெல்லாம் மேன்மைபொருந்திய வீடுகள்தோறும்போய் அழைத்துக்கொண்டு விடியற்காலத்தில் இவர்களெல்லாங்கூடித் தீர்த்தத்திலேபோய் ஸ்நானஞ்செய்வார்கள் என்றவாறு. (௬௰)

அன்னவரியல்புகண்டா ராங்கவர்புகன்றதாக ... ... *
மன்னியதிருவெம்பாவை வாசகம்பேசிப்பின்னர்க்... ...*
கன்னியர்பாடியாடுங் கவின்கொளம்மனைகண்டன்னார்... *
பன்னியபாடலாக வம்மனைபாடல்செய்தார் ... ...*

(இ-ள்) அவர்களுடைய இயற்கையைக்கண்ட மாணிக்கவாசகர் மங்கையர்கள் சொன்னதாக நிலைபெற்ற திருவெம்பாவை சொன்னபின்பு மங்கையர்கள் பாடியாடுகின்ற அழகினைக்கொண்ட அம்மனையைக்கண்ட மாணிக்கவாசகர் அவர்கள்சொன்ன பாடலாகத் திருவம்மானைபாடினார்.எ-று.

விரவுமன்புடையாரந்த மேதகுதலத்தைநீங்கிப் ... ...*
பரிவுடன்கச்சியேகாம் பரந்தனிர்பரனையேத்தித் ... *
தெரிவருங்காமக்கோட்டிச் சீரடிவணங்கித்தேவர் ... ...*
வரநிலைந்திறைஞ்சுந்தெய்வ வண்கழுக்குன்றிற்சென்றார். *

(இ-ள்) கலந்த அன்பையுடையவராகிய மாணிக்கவாசகர் மேன்மை பொருந்திய அந்தத் திருவண்ணாமலையை நீங்கி அன்புடனே காஞ்சிமாநகரில்வந்து ஏகாம்பரநாதரைக் கண்டு வணங்கித் தெரிதற்கரிய திருக்காமக் கோட்டத்தில் காமாட்சியினுடைய சிறிய இரண்டு திருவடிகளையும் வணங்கித் தேவர்கள்வரங்களைக்குறித்து வணங்குகின்ற தெய்வீகமுள்ள வளத்தையுடைய திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளினார் மாணிக்கவாசகர்-எ-று.

கோட்டிதழ்மெழுங்கொன்றைச் சென்னியக்குலவுமன்பர் *
சூட்டியமலர்த்தாள்போற்றித் துணைவநின்செய்யமேனி ...*
காட்டினைகலங்காவண்ண மிக்கழுக்குன்றிலென்று ... [தார்
பாட்டினைமொழிந்துசின்னாள் பயின்றபின் பணிந்துபோந்

(இ-ள்) கொம்புகளிலே யிதழ்விரிகின்ற கொன்றைமாலிகைதரித்த சிரசையுடைய கடவுளுக்கு அன்பராகிய மாணிக்கவாசகர் தன்முடியிலே சூட்டிய தாமரைமலர்போன்ற பாதத்தைவணங்கித் துணையானவனே? யான் கலங்காதபடி சிவந்தமேனியைக்காட்டினாய் கழுக்குன்றிலேயென்று பாட்டினைச்சொல்லிச் சிலநாள்வசித்துப் பின்பு பணிந்து எழுந்தருளினார்-எ-று.

அந்தலமுதலாநாப்ப ணடைந்துளநகியுங்கானு ... ...*
மைத்தடங்கிரியுங்காவும் வாவிகள்பலவுநீங்கிப் ... ... *
பைத்தவெம்பாம்போடாடி நரியெலாம்பரிகளாக்குஞ் ...*
சித்தர்தென்றில்லைமூன்று காவதமென்னச்சென்றார். .. *

(இ-ள்.) அந்த ஸ்தலமுதல் மத்தியப்பிரதேசத்திலேயிருந்துள்ள ஸ்தலங்களும், காடுகளும், கரியவிசாலமாகிய மலைகளும், சோலைகளும், தடாகங்களும், நதிகளும், கடந்து படத்தையுடைய வெய்யசர்ப்பத்தோடு விளையாடி நரிகளையெல்லாம் குதிரையாக்கிய சித்தராகிய கடவுளது அழகிய தில்லைமாநகர் மூன்றுகாதவழியென்றுசொல்ல, வெழுந்தருளினார் மாணிக்கவாசகர்-எ-று. (௪௪)

[வேறு.]

தாழுரான்மடப்பாவையர்தோளாசையிலாளா ... ... *
டாழுகுருமிட்டுண்டுயிர்வாழாதவர்தாமுந் ... ...*

தீமூள்ளரவரன்மேலருள்செய்யாதவர்பலரும்... ... ... *
போமூர்வழிபோகாதவர்புலியூர்வழிபோனார்... ....*

(இ-ள்) பரிசுத்தமாகிய தந்தவரிசைகளையுடைய மங்கையர்கள்தோளாசையிலாட்படுகின்ற ஆண்மைகளும் இட்டுண்டு உயிர்வாழாதவர்களும் அக்கினிமூளுகின்ற திருக்கரத்தையுடைய கடவுண்மேல் அன்புசெய்யாதவர்களும் போகப்பட்ட நரகவழியிலே போகாதமாணிக்கவாசகர் புலியூராகிய சிதம்பரத்தின் வழியாகப்போயினார்-எ-று. (௬௫)

செல்லுஞ்சுரமிருபாலொளிதிகழ்கொன்றைகண்மலரா .. *
வெல்லொண்டிரியவிமையோருலகெனநின்றனவெங்கும் ... *
புல்லுஞ்சிவநாமத்தமிழ்போல்வண்டினிசைபாடச்...... ......*
சொல்லும்பொருள்வல்லார்தம்கைபோன்றனதோன்றி ... *

(இ-ள்) இப்படி சொல்லுகின்ற மார்க்கத்தி னிரண்டு பக்கத்திலும் ஒளிவிளங்குகின்ற கொன்றைகள்மலர்ந்து எங்கும் பிரகாசம்பொருந்திய தேவர்களுடைய பொன்னுலகம்போல் நின்றன. சிவநாமத்தைத் தழுவுகின்ற தமிழ்போல் வண்டுகளிசைபாட அதற்குப் பொருள்சொல்ல வல்ல வித்துவான்கள் அபிநயங்காட்டுங் கைகள்போல் மலர்ந்திருந்தனகாந்தள்களென்றவாறு. (௬௬)

தெள்ளுஞ்சிவஞானஞ்சிறிதில்லார்தவவேடம்............*
கொள்ளுஞ்செயலெனவொண்மலர்குலவுங்கவிரெல்லாம்.. *
பள்ளம்படர்புனல்போற்புலன்வழியேயயில்சிறியோ......*
ருள்ளந்தனையொக்குந்திகழ்மைக்கொண்டொளிர்காயா... *

(இ-ள்) தெளிந்தறிகின்ற சிவஞானம் சிறிதுமில்லாதவர்கள் தவசிகள் வேடங்கொள்வதுபோல முருக்குகளெல்லாம் வாசனையில்லாத ஒளியையுடைய மலர்களைமலர்ந்திருந்தன பள்ளத்திற்செல்லுகின்ற நீரைப்போல் ஐம்புலன்வழியே செல்லுகின்ற சிறியோர்களுடைய மனம்போலக் கரியமலர்களைப் பூத்திருந்தன காயாமரங்களெல்லாமென்றவாறு. (௬௭)

பாயங்குலமந்தித்திரள் பயிலுந்தொறுமசையா .... *
வீயின்குழுவெழுதேனினிரல்சேர்மலர்நாக..................*
மாயந்திகழ்தாராகணமகல்வான்மிளிர்மதிய ....*
மேயும்படிகிளர்பொங்கரினிடைநின்றனவெங்கும் ... ... *

(இ-ள்) புன்னைமரங்களிலே குரக்கினங்கள் குதித்துச் சஞ்சரிக்குந்தோறும் அசைந்து ஈயின்கூட்டங்களெழுகின்ற தேன்கூண்டும் மலர்களும் அகன்ற ஆகாயத்தில்விளங்குகின்ற சந்திரனும் தாரகைகளும்போல எங்குமிருந்தன சோலையினிடையிலென்றவாறு. (௬௮)

பக்கங்கிளர்கமுகின்றிரள்பலசாமரைவீசக் ... ...*
கொக்கின்றளிர்கோதும்பலகுயில்காகளமூதக் .. ..*
தொக்கம்பொழிவிண்ணுறைபவர்சொரியும்பலபொற்பூ.....*
வொக்கும்படிமலர்சிந்தினவொண்சண்பகச்சோலை ....*

(இ-ள்) மாணிக்கவாசகருக்குப் பக்கத்திற்பிரகாசிக்கின்றகமுகமரக்கூட்டங்கள் அனேகஞ்சாமரங்கள்வீச மாந்தளிரைக் கோதுகின்ற அனேகங்குயில்கள் சின்னமூத மிகுந்த அன்புடனே தேவர்கள்சொரிகின்றபல பொன்மலரை ஒக்கும்படி ஒளிபொருந்திய மலர்களைசிந்தின சண்பகச்சோலைகளென்றவாறு. (௪௯)

நீங்காவளமிவ்வாறுளநீள்சூதநரந்தந்... ... ... *
தேங்காரளிமுரல்பாதிரிதெங்கின்றிரள்வருக்கம் ... ... *
கோங்காசினிகொந்தார்செழுமந்தாரநெருக்கும்...... ...*
பூங்காவையகன்றூர்புலியூர்நன்னகர்கண்டார்... ... ...*

(இ-ள்) நீங்காதவளங்களையுடைய நீண்டமாவும்-நாரத்தையும்-நிறைந்தவண்டுகள் சத்திக்கின்ற பாதிரியும்-தெங்குமகிழும் தேக்கும்-பலாவும்-கொத்தார்ந்த செழுமையுள்ளமந்தாரமும்- ஆகியமரங்கள் நெருங்கியபூஞ்சோலையைக்கடந்து சிதம்பரத்தைக் கண்டார் மாணிக்கவாசகரென்றவாறு. (௫௰)

சேணோங்கியமதிலும்பணிதிகழ்கோபுரநிரையுஞ் .. ... *
சோணந்தருகும்பங்கிளர்துணைமாளிகைபலவுங் ....*
காணுந்தொறுமெழில்செய்வதுகண்டஞ்சலிகொண்டே.. *
பூணுந்திருவருளன்பர்புகழ்ந்தாருண்மகிழ்ந்தார் .. ..*

(இ-ள்) உயர்ச்சிபொருந்திய மதிலும், சிற்பத்தொழிலின் மிகுந்த கோபுர வரிசைகளும்,சிவந்தகும்பங்கள் பிரகாசிக்கின்ற அனேகஉப்பரிகைகளும்,பார்க்குந்தோறும், அழகினைச்செய்வதுகண்டு அஞ்சலியாஸ்தராய்ப் புகழ்ச்சிசெய்துமகிழ்ச்சிகொண்டார் திருவருள்பூண்ட அன்பராகிய மாணிக்கவாசகரென்றவாறு. (௫௧)

வேதந்தருமொலியுந்தொழும்விண்ணோர்தமதொலியும்...*
கீதந்தருமொலியுங்கிளர்முழவக்களியொலியும் ....*
போதந்தருசிவஞானிகள்புகலாகமவொலியு ....*
மோதுந்தமிழொலியுங்கடலொலிசெய்தனபுலியூர்... ... *

(இ-ள்) பின்னும் அந்தச்சிதம்பரத்திலேவேதமோதுகின்ற சத்தமும், வணங்குந்தேவர்கள் சத்தமும், பாடுகின்ற கீதங்களின் சத்தமும்,பிரகாசிக்கின்ற பேரிகைகளின்சத்தமும்,அறிவினைத்தருகின்ற சிவஞானிகள் சொ

ல்லுகின்ற ஆகமங்களின் சத்தமும், ஓதுகின்ற தமிழின் சத்தமும், கடல் போலச் சத்தித்தனவென்றவாறு. (௫௨)

நிரையொன்றியமணிமாளிகைநெடுவீதிகளகலா... *
வரையொன்றியவுயர்கோபுரமணிவாயில்புகுந்தே... *
யுரையொன்றியசிவஞானமுரைக்குஞ்சிவநன்னூல்... *
கலைகண்டவர்மணிமன்றெதிர்கண்டாரருள்கொண்டார்... *

(இ-ள்) வரிசைபொருந்திய அழகிய உப்பரிகைகளையுடைய நெடிய வீதிகளைக்கடந்து மலைபோற்பொருந்திய உயர்ந்த கோபுரவாயல் வழியாகப் புகுந்து பொருந்திய சொல்லையுடைய சிவஞானத்தை விளக்குகின்ற சிவாகமங்களைக் கலைகண்ட மாணிக்கவாசகர் சிற்சபையை எதிரேகண்டு அருள்பெற்றார்-எ-று. (௫௩)

பொன்னார்பொதுநின்றாடியபுனிதன்றனைமுடிமே... *
லன்னாளடிவைக்கும்பரனாகும்படிகண்டார்... *
மன்னாவுயிரன்னாய்மணிமன்றாசவென்றே... *
சொன்னார்பலகாலன்பொடுதொழுதார்மிகவழுதார்... *

(இ-ள்) பொன்னம்பலத்திலேநின்று திருக்கூத்தாடிய கடவுளைத் தம்முடைய சிரசிலே அந்தநாளிலே திருவடிகளைச்சூட்டிய குருவுருவமாகக்கண்டு இந்தச்சகத்துக்கெல்லாம் அரசனே? உயிருக்கொப்பானவனே? சபாநாயகனே? உனக்கு அடைக்கலமென்றுசொல்லிப் பலதரம் அன்புடனேதொழுது மிகவும் அழுதார்மாணிக்கவாசகர்-எ-று. (௫௪)

விண்டேயிருகண்ணீர்விழவீழ்ந்தின்னடிமுடிமேற்... *
கொண்டேயெழுந்தன்பொடுமுறையவருணிறையா... *
வண்டேர்குழலுமைபங்கனைவண்டில்லையுளின்றே... *
கண்டேனெனநற்பாடல்கருத்தாரவுரைத்தார்... *

(இ-ள்) இரண்டுகண்களும் ஆனந்தபாஷ்பம்பொழிய நமஸ்காரம் பண்ணி திருவடிகளை முடியிற்சூட்டிக்கொண்டு பின்பு எழுந்து அன்புடனே குறைவில்லாத திருவருள் நிறைந்து வண்டுகள்மொய்க்கின்ற கூந்தலையுடைய உமாதேவிபாகனாகியகடவுளை வளத்தையுடைய தில்லைமாநகரிலே இப்பொழுதே கண்டேனென்று நல்லபாடல்களாகியகண்டபத்து மனங்கொள்ள உரைத்தார் மாணிக்கவாசகரென்றவாறு. (௫௫)

குன்றாவருண்மூலந்திகழ்குறியாகியசுடரு... *
மன்றாடியவெளிபூபியகிழ்ந்தாடியவொளியு... *
மொன்றாகியவனுபூதியினுற்றார்செயலற்றார்... *
நின்றாசைவில்லாவொருநிலையோவியமானார்... *

(இ-ள்) கைகளிலேயிருக்கின்ற சங்கவளையல்கள் சத்திக்கச்செம்பொன்னாற்செய்த இணைமணிகள் சத்திக்க மயிர்ச்சாந்தணிந்த கரியகூந்தலின் மேல் வண்டுகளெழும்பி இசையைப்பாடத்தேகத்தின்மேல் வேர்வையுண்டாக வெவ்விய போர்செய்கின்ற கண்ணாகிய கயல்களைப்புரட்டிப் பக்கங்களிலேயிருந்தவர்கள் நின்ற மாதர்களெல்லாம் திருப்பொற்சுண்ண மிடித்தார்களென்றவாறு. (௬௩)

அத்திருவனையார்பாடல் கேட்டவரிசைத்ததாக...... ... ...*
மெய்த்தமிழ்நலனுமிகுதிருச்சுண்ணமோதி... ......*
மைகதிசூழ்காவனூர்வேந்தனுமங்கேபோய்தல்...... ......*
தந்தமிலமூபனுககாதஞ்சிறமியர்தம்மைக்கண்டார்... ...*

(இ-ள்) இந்தமாதர்களுடைய பாடல்களைக்கேட்டு அவர்கள் சொல்லியதாக மெய்யாகிய தமிழினால் நன்மைமிகுந்த திருப்பொற்சுண்ணம்பாடியேகங்கள் பிரகாசிக்கின்ற சொல்லியிடத்தேவருமளவில் அங்கேதங்கள் தங்களுக்குள்ளே விளையாடுகின்ற பெண்பிள்ளைகளைப் பார்த்தார் மாணிக்கவாசகரென்றவாறு. (௬௪)

கண்டபின்வறிதுகூறுங்கட்டுரைசிறிதுமற்றெம்...... ......*
மண்டலையுரைமினீரொன்றவரவருரைத்ததாக... ....*
வெண்டருதிருத்தெள்ளேணந் திருவுந்தியெழிற்றோணோக்கம்
பண்டிகழ்திருப்பூவல்லிப்பாடல்பொன்னூசல்சொன்னார் *

(இ-ள்) பார்த்தபின்பு வீண்பேச்சுச் சிறிதுமில்லாமல் எமதுகடவுளையே சொல்லுங்கள் நீங்களென்று அவரவர்கள் சொல்லியதாகத் திருத்தெள்ளேணம்- திருவுந்தியார் திருத்தோணோக்கம்-பண்கள் விளங்குகின்ற திருப்பூவல்லி- திருப்பொன்னூசல் பாடினார்- மாணிக்கவாசகரென்றவாறு.

ஆங்கொருசிறுமிதன்சிரலனையைநோக்கிக்கூறுந் ....*
தாங்கிசைமொழியேயாகத்தகுமனையீனாந்தோதி .... *
ஞாங்கரின்முரலுந்தும்பிதன்னையுரையிற்றூதன்... ... ...*
பூங்கழல்வழுத்துகென்றபுனிதர்கோத்தும்பிசொன்னார் *

(இ-ள்) அங்கேஒருபெண் சிறந்த தனதுதாயைப்பார்த்துச் சொல்லுந்தாங்கப்பெற்றஇசையையுடையசொல்லென்னத்தக்க அன்னைப்பத்துப் பாடிப் பக்கங்களில்பாடுகின்ற தும்பியை விரும்பிப்பார்த்துக் கடவுளுடைய திருவடியைத் துதிசெய்யென்ற திருக்கோத்தும்பிசொன்னார் மாணிக்கவாசகரென்றவாறு. (௬௫)

பொங்கரினிடையேவாழும்பொற்பிளங்குயிலேகூவி... ...*
யிங்கழைமெம்பிரானையெல்படருங்களியைநோக்கித்... ...*

திங்களஞ்சடையோன்பாதஞ் செப்பெனத்தசாங்கமென் றும்
தங்கிளைசத்தமிழுஞ் சொன்னார் தனிகரொருவரில்லார்... ✱

(இ-ள்) சோலையிலே மத்தியத்திலேவாழ்கின்ற குயிலைப்பார்த்து அழகிய இளங்குயிலே இக்கேளமதுகடவுளைக்கூவி யழையென்பதாகிய குயிற்பத்தும்கிளியைப்பார்த்துசந்திரனைத்தரித்தகடவுளைச்சொல்லென்றும்திருத்தசாங்கமும்பாடினார்தனக்குநிகரொருவருமில்லாதமாணிக்கவாசகர் எ-று.

மண்ணிடைத்தப்பையாண்ட வடிவினையன்றிமற்றோ...... ✱
ரண்ணலைக்கடவுளென்பார்க் கஞ்சு மும்வினையேனென் றும் ✱
பண்ணுறச்சிறந்தசெய்யுள் பகர்ந்துநற்பன்னசாலை... ...✱
யொண்ணகர்ப்புறம்புசெய்தங் கிருந்தனருண்மைமிக்கார் ✱

(இ-ள்) பூமியிலே தம்மை யடிமைகொண்ட கடவுளையல்லாமல் வேறொருவரைத் தெய்வமென்பதற்கு அஞ்சுகின்றேன்-வினையை யுடையேனென்றும் சிறந்தபன்னையுடைய அச்சப்பத்துப் பாடியபின்பு அந்த நகர்ப்புறத்திலே ஒருபன்னசாலைசெய்து அங்கிருந்தார் உண்மையிலேமிக்க மாணிக்கவாசகர்-எ-று. (௬௮)

பரம்பரப்பொருளாமிந்தப் பைந்தமிழாகிவையம்..... ✱
பெரும்பிறப்பகலவந்து பிறந்தவர்செய்தியெல்லா... ...✱
மிருந்தநற்றெருதிதோறு மியம்பிநன்மகிழ்ச்சியெய்தி . ✱
யரும்புகழ்த்தில்லையுள்ளா ரியாவருமதிசயித்தார்... ......✱

(இ-ள்) உலகமானது வேதாந்தப்பொருளாகிய இந்தத் திருவாசகத்திலேழைச்சொல்லிப் பெரியபிறப்பினின்று நீக்கவந்து திருவவதாரஞ்செய்த மாணிக்கவாசகருடையசெய்தியனைத்தும் அரியபுகழையுடைய தில்லையிலுள்ளவர் யாவரும் தங்கள்கூட்டங்கள்தோறுஞ்சொல்லி நல்ல மகிட்சிபெற்று அதிசயித்தாரென்றவாறு. (௬௯)

தத்துவமுடிவிலாடுந் தாண்டவந்தம்முட்கண்டு... .... ✱
நித்தலுஞ்சென் றுமன்றிலிடலனையன்பாலேத்தி .... ✱
யித்திறமையர்தில்லையெல்லையில்லவகவிப்பாற் .... ✱
புத்தனாவாதில்வென்றபுகழினையுரைத்தல்செய்வாம்... ...✱

(இ-ள்) முப்பத்தாறுதத்துவத்தின் முடிவிலேசெய்கின்ற சபாநாயகரது திருநடனத்தைத்தமக்குள்ளேகண்டு நித்தியம்போய் அந்தக்கடவுளைப் பத்தியினாலேவணங்கி யித்தப்பிரகாரம் மாணிக்கவாசகர் தில்லைமாநகரத்து எல்லையிற்செய்த பன்னசாலையி லெழுந்தருளியிருக்க இப்பால் அவர்புத்தனைவாதிலேசெயித்தகீர்த்தியைச்சொல்லுவாமென்றவாறு (௭௰)

திருவம்பலச்சருக்க முற்றிற்று.—அ-திருவிருத்தம்-௬௱௭௰.

உ

திருச்சிற்றம்பலம்.

புத்தரைவாதில்வென்ற

சருக்கம்.

(வேறு.)

தாழுநீடுவேணியன்னை றாள்விடாமேவார்மாதவ ....*
னாழிஞாலவண்மையுண்மையாயுநேயநெஞ்சினான் ... .*
சோழநாடுகண்டுதில்லைதொழுதின்புபழுதிலா ... .*
வீழநாடுதன்னைநாடிவண்ணவிங்குநண்ணினான் ....*

(இ-ள்) தாழ்ந்துநீடிய சடாபாரத்தையுடைய பரமசிவனுடைய இரண்டுபாதங்களையும்விடாத ஒருதபசியானவர் சமுத்திரஞ்சூழ்ந்த பூமியிலுள்ளவளத்தை ஆய்த்தக்கஇச்சையுள்ள மனமுடையவராய்ச் சோழநாட்டைக்கண்டு தில்லைநகரை வணங்கிப் பின்பு குற்றமில்லாத ஈழதேசத்தைப் பார்க்கவேண்டுமென்று நினைத்து அங்கேபோயினார்-எ-று.

நண்ணுமாதிமாதவன்னல்லெழிலீழநாடனு... ... ... *
மன்னனூனிருந்தவூரடைந்துசேரிடந்தொறு ... ...*
மென்னனில்லாதகாலவாழிதில்லைமன்றமென்றகூ ... *
றுன்னிலவுமன்பினுளுரைக்கவேதொடங்கினான்... ...*

(இ-ள்) அப்படிபோன தபசியானவர் முதன்மைபெற்ற நன்மையைக்கொண்ட ஈழநாட்டரசன்- இருந்தவூரைச்சேர்ந்து மிகுந்த உள்ளன்பினாலே தானிருக்குமிடந்தோறுஞ் சிதம்பரம் அளவில்லாதகாலம் வாழ்கவென்று சொல்லத்தொடங்கினானென்றவாறு. (உ)

சென்றுசேரிடந்தொறுஞ் சிறந்தசெம்பொனம்பல......*
மென்றுகூறிவைகுநாளி லீழநாடன்முன்புபோய்....... *
நன்றிலாதமூடர்தா நயந்திறைஞ்சிமன்னனே ....*
வென்றியாருரைத்துமென் றுவந்திவ்வாறுகூறினார்... ...*

(இ-ள்) தான்போய்ச்சேருமிடந்தோறுஞ் சிறக்கப்பெற்றபொன்னம்பலம்வாழ்கவென்று சொல்லியிருக்குநாளில் அங்கேயிருக்கும் நன்மையில்லாதமூடராகியபுத்தர்ஈழதேசத்துராஜாவுக்கெதிரேபோய் நயப்புடனவனைவணங்கி அரசனேயொன்றுவேண் டாம்சொல்லுகிறோமென்று மகிழ்ச்சியுடன் இந்தப்படி சொன்னார்கள்-என்றவாறு. (௩)

ஒற்கமில்திருத்தனொருத்தனிந்நகர்க்குளா ... ... *
னற்கலன்களக்குமாலை நாளுமுண்பதையமே... ... ...*
நிற்கினுமிருக்கினுநிலாவுசெம்பொன்மன்றெனுஞ் ... *
சொற்கிளர்ந்துரைக்குமென்று சொல்லிமுன்வணங்கினர், *

(இ-ள்) குறைவில்லாத திறமையுடையவனாகு மொருத்தன் இந்நகரி லேயிருக்கின்றான் அவனுக்காபரணமுருத்திராக்ஷமாலிகை அவன் நாள்தோறும் புசிப்பது பிக்ஷைநின்றாலும் இருந்தாலும் பிரகாசத்தையுடைய பொன்னம்பலமென்னுஞ் சொல்லைச் சொல்லுகிறானென்று சொல்லி முன்னே வணங்கினர்களென்றவாறு. (௪)

[வேறு.]

இன்றிங்கவனைக்கொணர்வீரான்றிசைத்தானிருபனுங்கவருஞ் ...*
சென்றன்புடையாய்வருகவுனையழைத்தானிறன்மன்னவனென்ன
நன்றென்பதுவுந்தீதுமிலா நாளும்பலிபெற்றுண்பதொழிந் .. *
தொன்றுக்கருதாருடன்வருமருள்ளதோவேந்தற்கெனவுரைத்தான்.

(இ-ள்) அவ்வரசனானவன் இன்று இங்கே அவனைக் கொண்டுவாருங் களென்று சொன்னான், அவரும்போய் அன்புடையவரே உம்மையரசன ழைக்கின்றான் வாருமென்றார் அதற்கு அவர் சொல்லுவார் நாள்தோறும் நன்மையுந் தீமையுமில்லாத பிச்சையெடுத்து உண்பதல்லாமல் ஒன்றும் நினையாதவர்களிடத்தும் அரசனுக்குக் காரியமுண்டோவென்றார்-எ-று.

ஊரிற்பலிகொண்டுண்கினுமற் றொன்றுங்கருமமிலதெனினும் . *
பாரிற்பயில்வாருயிர்புரத்தல்பாரந்திருப்பார்க்காதலினல்... ... .. *
வேரிக்கமழ்தாரெம்மரசன்றன்பால்வருதல்வேண்டுமெனச் .. *
சீரிற்றிகழ்வேற்றூதருடன்சென்றானன்றூர்தீமையிலான் . *

(இ-ள்) ஊரிலே பிக்ஷையெடுத்துண்டாலும் காரியம் ஒன்றுமில்லை யானாலும், பூமியிலேயிருக்கின்றவர்களுடைய உயிரை ரட்சித்தல் அரசர்களுக்குப்பாரமாகும், ஆகலினால் கமழ்கின்ற வேராற்செய்த மாலையை யுடைய எங்களரசனிடத்திலே வரல்வேண்டுமென்றுசொல்ல நல்லதென்று சிறப்புவிளங்கிய வேலையுடைய தூதருடனேபோனார் தீங்கொன்று மில்லாத தபசியானவர்-எ-று. (௫)

முற்றும்பிடகமூன்றுணர்ந்துசெயிர்நான்கொழிந்துமூதறில *
மைற்றும்புனைந்துபார்மீத்தயாநிறைந்தடக்குமியல்புடையோன் *
சுத்தக்கெடுதன்முத்தியெனக்காட்டுங்குரவனிருப்பவுடன் ... .. *
சத்தஞ்சிறந்தபுயநிருபனிருந்தான்றனைபுடைசூழ ... ...*

(இ-ள்) ஆதியாகியபிடகநூல் மூன்றுமறிந்து நான்குகுற்றமும் நீங்

கிச் சிலைமீந்துந்தரித்துக் காமாதியாறும் பஞ்சேந்திரியங்களும், அடக்கப்பட்ட இயல்பையுடையவனும்ப் பஞ்சகந்தமுங்கெடுவது முத்தியென்று காட்டுகின்ற பௌத்தாசாரியன் தன்னுடனேயிருக்கச் சேனைகள் புடைசூழ அழகுசிறந்த புயத்தையுடைய புத்தராசனுமிருந்தான்-எ-று.

உடுக்குந்துனிவெண்கோவணமுமொளிர்பொக்கணமுமாத்திரையு*
மெடுக்குஞ்சதங்கைநெடும்பிரம்புமிலகுந்திலதத்திருமுகமு ... *
மடுக்குஞ்சிறுபுன்முறுவலுநின்றசையுஞ்சடையுங்கண்டரசன் ...*
திடுக்குங்கொளவந்தருகாகவிருந்தான்றிருவம்பலமென்று... ...*

(இ-ள்) அப்போது தபசியானவர் உடுக்கப்பட்ட ஒரு வெள்ளைக்கோவணமும் பிரகாசிக்கப்பட்ட பொக்கணமும், சதங்கைகட்டிய நெடியபிரம்பும் திலதப்பொட்டணிந்த திருமுகமும், சிறிய புன்சிரிப்பும், அசைகின்ற சடையும்பார்த்து அரசன் திக்கிடவந்து அருகேயிருந்தான் திருவம்பலமென்றுசொல்லி-எ-று. (௮)

இருக்குந்தலைவன்றனைநோக்கியிப்போதிருவம்பலமென்றிங்... ... ...*
குரைக்குந்தகைமையெவன்கொலெனவுலகாள்பவனுக்கவனுரைப்பான்*
பெருக்கும்புகழ்த்திகழ்வளவன்பிரியாவிருகட்பேரருளாற் ....*
புரக்குந்திருநாட்டறந்தழைக்கும்புலியூரென்பதொன்றுளதால்... ...*

(இ-ள்) இப்படியிருந்த தபோதனனைப்பார்த்து இப்போது நீர் திருவம்பலமென்று இங்கேசொல்லுந் தன்மை யென்னவென்றவினவ, அவ்வரசனுக்கு அவர்சொல்லுவார் செல்வத்தை அதிகரிக்கச்செய்யுங் கீர்த்தியினாலே பிரகாசிக்கின்ற சோழராஜாவானவன் பிரியாத தன்னுடைய திருபார்வைகளாலே ரட்சிக்கின்ற சோழநாட்டிலே சிதம்பரமென்றொரு ஸ்தலமுண்டு-என்றவாறு. (௯)

அந்தப்பதிமுன்றில்லைவன மஃதேதிரிபுவனமனைத்தினுக்கு....... .. *
முந்தக்கிளருந்தெய்வதல மதனால் மூலதானமதா... ... ... *
யிந்தப்புவிக்குநாப்பணென விலக்கும்பொதுவாமிடமதனிற்... *
சந்தத்தனத்தாளுமைகாணத் தலைவன்றிருத்தாண்டவம்புரிந்தான் *

(இ-ள்) அந்தஸ்தலம்-முன்னே தில்லைவனம்- அதுவே திரிபுவனத்துக்குமுன்னே உண்டாகிய தெய்வஸ்தலமாம்- அதனால், மூலஸ்தானமென்று சொல்லலாம்- இந்தப்பூமிக்கு நடுவாகப் பிரகாசிக்கின்ற சிற்சபையிலே சந்தனம்பூசப்பட்ட ஸ்தனத்தையுடைய உமாதேவிகாணச் சபாநாயகர் திருநடஞ்செய்தார்-எ-று. (௰)

மன்னுந்திறலான்மனுமைந்தன்வடிவிற்றெழுநோய்மாற்றிநெடும்
பொன்னங்கிரிபோலுருநல்கும்புனிதத்தடமுண்டதின்மூழ்கி ...*

முன்னம்புவிமேற்றவமொன்றுமியலாதவருமைந்துதொழி... ... .. *
லென்னுந்திருத்தாண்டவம்புரிதல்கண்டாலுலகிலினிப்பிறவார் ... .. *

(இ-ள்.) நிலைபெற்றநிறைவையுடைய மனுச்சக்கரவர்த்தி குமாரனாகிய இரணியவன்மனுவுடைய தேகத்திலிருந்த குட்டரோகத்தை நீக்கி நெடியமகமேருவைப்போலுந் திவ்வியதேகத்தைக்கொடுத்த பரிசுத்தமாகிய சிவகங்கையென்னும் ஒருதடாகமுண்டு, முன்னேபூமியிலே யொருதவமுஞ் செய்யாதவரும் அதிலேமூழ்கிப் பஞ்சகிருத்தியத்திற்குக் காரணமாகிய நிருத்தத்தைத் தெரிசித்தால்அவர்கள்உலகத்திலேவந்துபிறவார்கள்-எ-று.

நன்னும்பிறவியொழித்துயிர்க்குநலஞ்சேர்முத்திகொடுக்குமதற் ... *
கென்னுஞ்சமயக்கடவுளரில்யானேவல்லேனெனப்பதமேல்...... .. *
வண்ணந்திகழ்பொற்கழலணிந்துமதனைக்கொடியுங்கட்டியருட்..... *
பெண்ணம்பிகைகண்காணநடஞ்செய்தானந்தப்பெருந்தருக்கால் ...*

(இ-ள்.) பொருந்திய பிறவியைநீக்கி ஆத்மகோடிகளுக்கு நன்மையான மோக்ஷத்தைக்கொடுப்பதற்கு நினைக்கின்ற அநேக சமயதெய்வங்களில் யானேவல்லவனென்று திருவடிமேல் அழகுவிளங்கிய பொன்னினாற்செய்த வீரக்கழலையணிந்து வலிமையுடைய கொடியுங்கட்டி அந்தக்கர்வத்தால் அருட்சத்தியாகிய உமாதேவிகாண நடஞ்செய்தானென்றவாறு. (௰௨)

தேக்குஞ்சடிலமுடிக்கடவுளிருதாள்கருதாத்தீமனமும்... ... ...*
வாக்குஞ்செயலுங்கொடியாரு மொருகாற்பொன்னம்பலமென்னி
லாக்கந்தருமஞ்செழுத்திருபத்தோராயிரத்தோடறுநூறு... ...*
நாக்கொண்டோதற்குநிகரென்றுங்குன்றாநற்புகழான்..... *

(இ-ள்) நிறையப்பெற்ற சடாமுடியையுடைய பரமசிவனுடைய இரண்டுபாதத்தை வணங்காத தீயமனமும் வாக்கும்செய்கையுமுடைய கொடியவர்களும் ஒருதரம் நிலைபெற்ற பொன்னம்பலமென்று சொன்னால் செல்வத்தைத்தருகின்ற பஞ்சாக்ஷரத்தை இருபத்தோராயிரத்தறுநூறுதரம் நாவைக்கொண்டு சொல்வதற்கு நிகரல்லவாவென்றுங் குறையாத நல்லகீர்த்தியையுடைய தபசியானவர் எ-று. (௰௩)

நீறுந்திருவஞ்செழுத்துமிலாநிருபர்திருவம்பலமென்று...... *
கூறும்பொருளிங்கிதுவாகு மென்றான்குன்றுமெனுங்குணத்தான்
றேறும்பிடகமென்னுமுனிசெய்யுந்தலைவனல்லாது... ... ...*
வேறுங்கடவுளான்றுளதோவென்றேபுத்தன்வெகுண்டுரைப்பான்

(இ-ள்) மலையென்று சொல்லுங் குணத்தையுடைய தபசியானவர் விபூதி பஞ்சாக்ஷரமில்லாத அரனே திருவம்பலமென்று நாம்சொன்ன

தற்குப்பொருள் இதுவாருமென்றார் - அப்போது தேறுகின்ற பிடகா
மமூன்றுஞ் சொன்ன தலைவனல்லாமல் வேறே ஒருதெய்வமுண்டோவெ
ன்று கோபித்துப் பின்னையுஞ்சொல்வான் புத்தகுருவானவன்-எ-று.(௰௪)

செம்மேறுதில்லைப்பொனம்பலத்திற்சேர்வேன்வாதுசெய்தவன்று ...*
னின்றேறாடிக்குக்கழலீர்ந்திங்கொடியுமீங்கறுப்பே... ... *
னொன்றேகடவுள்புத்தனெனவுலகோரறியவுமாத்தந்த... ... *
மன்றேபோதிநிழற்பெருமாள்பள்ளியென்னவழங்குவிப்பேன்.*

(இ-ள்) அப்படியானால் தில்லைமாநகருக்குப்போய் வாதுசெய்து அவ
னிருந்து நிருத்தஞ்செய்கின்ற பாதத்திலிடுகின்ற வீரக்கழலையும்பிடிக்கி
ன்ற கொடியையும், அறுத்துப்போடுவேன் புத்தனொருவனேதவிர,வே
று தெய்வமில்லையென்று அந்தச்சபையை அரசமர நிழலிலிருக்கும் புத்
தன்கோயிலென்று சொல்லும்படி வைப்பேனென்றான் புத்தகுருவா
னவனென்றவாறு. (௰௫)

இந்தக்கருமத்தினமூன்றிலியானேமுடிப்பனெனவெழுந்து... *
சந்தச்சிவிகைமேற்கொண்டுதன்றாள்வணங்குங்கணஞ்சூழ... ...*
நந்தக்கிளருந்திசைக்கடலுநாடுங்காடுமகன்றேகிப்............ ...*
புந்திக்குயரங்கொண்டெல்லைசென்றான்புத்தன்புலியூரில்.... *

(இ-ள்) இந்தக்காரியத்தை மூன்றுதினத்தில் யானேமுடிப்பேனெ
ன்று அழகிய சிவிகையின்மீதி லேறிக்கொண்டு தன்னுடைய பாதத்தை
வணங்குகின்ற பௌத்தக் கூட்டங்கள்சூழ மிகவும்பிரகாசிக்கின்ற அலை
யையுடைய கடலும்நாடுங்காடும் நீங்கிப் புத்தியிலே வியசனங்கொண்டு
சீக்கிரத்திலே புத்தகுருவானவன் சிதம்பரத்துக்குப் போயினான்-எ-று.

(வேறு.)

மன்னனுந்தனதுசெல்வமகட்குளமூகைநீக்கப்...............*
பொன்னினம்பலத்திலேகவெண்பதுபொருந்தவுன்னித்...*
தன்னெடுந்தானைசூழச்சனிப்பெருஞ்சிவிகையேறிச்......*
சென்னிநன்னாடுசேர்ந்துதில்லையினெல்லைபுக்கான்... .....*

(இ-ள்) புத்தராஜனுந் தன்னுடைய செல்வம்போன்ற புத்திரிக்கு மூ
ன்னமேயுண்டான ஊமைத்தன்மை நீங்கச் சிதம்பரத்திற்குப் போகவே
ண்டுமென்பதை நினைத்துத் தன்னுடைய சேனைகள்சூழ ஒப்பற்ற பெ
ரிய சிவிகையிலேறிக்கொண்டு சோழநாட்டில்வந்து தில்லைமாநகரத்து
க்குவந்தான்-எ-று. (௰௭)

இங்கிவன்செல்லுமுன்னரெய்தியபுத்தனங்கி ....*
செங்கரன்றில்லையெல்லைச்சிவிகையினிழிந்துசென்று......*

பொங்குதண்புனல்சேர்செல்வி ப்புலீச்சுரவான்பொற்கோயிற் *
றங்குசெங்கனகசாலந்தயங்குமண்டபத்திலானான்............. ...*

(இ-ள்) இந்தப்புத்தராஜன் வருவதற்குமுன்னே வந்த புத்தகுருவானவன் அக்கினியைத்தரித்த சிவந்த கையையுடைய பரமசிவனுடைய தில்லைமாநகரத்து எல்லையின்முன்னே சிவிகையை விட்டிறங்கி மிகுந்த குளிர்ச்சிபொருந்திய கங்கையைத்தரித்த சிரசையுடைய பரமசிவனது ஆலயத்திலே பொன்னினாற்செய்த மண்டபத்தில் வந்துசேர்ந்தான்-எ-று.

ஆங்கவனிருப்பச்சென்ற வரசனுமிறைஞ்சியேத்தி... ...*
யோங்கியமகிழ்ச்சியெய்தி யமர்ந்துழியுரகராசி... ......*
தாங்கியசடிலன்கோயி றன்னிலுட்கருமஞ்செய்வா ... ...*
ரீங்கிவர்வரவுகண்டே யாவருமொருங்குசேர்ந்தார்.........*

(இ-ள்) அங்கேயிருந்த புத்தகுருவைப் புத்தராஜன்வணங்கித் துதிசெய்து-உயர்ந்த மகிழ்ச்சி யடைந்திருந்தபோது-சர்ப்பக்கூட்டத்தைமுடித்த சடையையுடைய பரமசிவனது கோயிலிலே பணிவிடைசெய்பவர்கள் இவர்கள் வருதலைக்கண்டு எல்லாரும் ஒன்றாய்ச் சேர்ந்தார்கள்-எ-று.

(வேறு.)

தத்தமனநொந்துகன லெனவெகுண்டே...... ... ...*
சித்தமயர்வெய்தும்வகை சின்மொழிகள்கூறு.............*
வத்தனுறைதில்லைநக ரெல்லையையகன்றே - ....*
புத்தகடிதேகிது பொறேமெனவுரைத்தார்...... ... ...*

(இ-ள்) அப்படி சேர்ந்தவர்கள் தங்கள்தங்கள் மனநொந்து அக்கினியைப்போற் கோபித்து அவர்க ளாயாசங்கொள்ளும்படி சிலவார்த்தைகளைப்பேசிக் கடவுளிருக்கின்ற தில்லைமாநகரி னெல்லையைவிட்டுப் புத்தனே? சீக்கிரத்திலோடிப்போ இது நாங்கள் பொறுக்கமாட்டோமென்று சொன்னார்கள்-—எ-று. (௨௰)

தார்வளவன்முன்னருமிர் தர்க்கவுரைகொண்டே............ *
நீர்பரவுசைவநிலை யன்றெனமொழிந்தே............. ..... *
சீர்மருவுபுத்தனுயர் தெய்வமெனவிப்போ................ *
தேர்பெறவுரைப்பதல தேகுவதிலென்றான்...... ... ...*

(இ-ள்) வெற்றிமாலையையணிந்த சோழன்முன்னே உயர்ந்த தர்க்கம்பேசி நீங்கள் போற்றப்பட்ட சைவமார்க்கம்நிலையன்றென்றுசொல்லிச் சிறப்புப்பொருந்திய புத்தனே? உயர்ந்த தெய்வமென்று அழகுபொருந்திய இப்போது சொல்வதல்லாமற் போவதில்லையென்றான்—எ-று.

 புத்தனைவாதில்வென்றசருக்கம்.

புத்தனவனிவ்வுரை புகன்றபின்னவர்க்கு...... ... ...*
மித்திறமுணர்க்குவ மெனக்கடிதகன்ற...... ... ..*
மெய்த்தவர்கள்வேதமுத லோர்பரிகலத்தோர் ... ...*
தத்தமனைதோறுமித சாற்றினர்களன்றே ....*

(இ-ள்) புத்தகுருவானவன் இந்தவார்த்தையைச் சொன்னபின்பு யாவர்க்கும் இதைச் சொல்லுவோமென்று சீக்கிரத்திலே உண்மையாகிய தபோதனர்களுக்கும், தில்லைமூவாயிரவர்களுக்கும், பரிகலத்தார்களுக்கும், அவரவர்கள் வீடுகள்தோறும்போய்ச் சொன்னார்கள்—எ-று. (உஉ)

புண்ணுழையும்வேலனிகர் புகன்றமொழிகேளா......*
வண்மையுறைகோயிலிடை யாவருமடைந்தே ......*
வண்ணமணிமண்டபம தெய்திவருபுத்த........ ...*
னெண்ணமதுகேட்குவ மெனக்கடிதுசென்றார் ... *

(இ-ள்) புண்ணிலே வேல்நுழைந்ததுபோல இவர்களெல்லாஞ்சொன்ன சொல்லைக்கேட்டுச் சபாநாயக ரெழுந்தருளியிருக்கின்ற கோயிலிலே எல்லோரும்போய் அழகிய ரத்தினம்பதித்த மண்டபத்திலிருக்கின்ற புத்தகுருவினுடைய நினைப்பென்னவென்று கேட்போமென்று சீக்கிரத்திற் போனார்களென்றவாறு. (உ௩)

தெய்வதரரானவர்கள் செல்லவெதிர்வாரா... ... ... *
மெய்புணர்வில்புத்தனை வெகுண்டுபலசொல்லா ... *
வுய்வதறியாதவொரு நீபயமிலாதே ... ...*
யிவ்வகையிருந்தமதி யாமையெதுவென்றார் ... ... *

(இ-ள்) தெய்வத்தன்மையையுடைய தில்லைமூவாயிரவர் போக- எதிர்கொண்டுவாராத உண்மைஞானமில்லாத புத்தனைக்கோபித்துப் பலம்பச்சுகள்பேசிப் பிழைக்கும்வகையறியாத நீ இங்கே அஞ்சுதலில்லாமல் மதியாமலிருந்த தன்மை யென்னென்று கேட்டார்களென்றவாறு. (உ௪)

அங்கமறையாகம புராணமலவயாலே.. ... ...*
நுங்கடவுளேகடவு ளென்றுநவில்வீரேல்... ... ... *
லெங்கடவுளேகடவு ளென்றுநவில்வேன்யா ... ... *
னிங்கெனெதிர்கூறுமென வேபவனுரைத்தான் ... *

(இ-ள்) ஆறுசாஸ்திரமும், நான்குவேதமும், இருபத்தெட்டாகமமும், பதினெண் புராணமும் ஆகிய அவைகளாலே உங்களுடைய தெய்வமே தெய்வமென்று சொல்வீர்களானால், எங்கள் தெய்வமே தெய்வமென்று யான்சொல்லுவேன், இங்கே யென்னெதிரே சொல்லுமென்று சொன்னான்-புத்தகுரு வென்றவாறு. (உ௫)

போற்றுமறையந்தணர்கள் புத்தனைவெகுண்டே... ......*
தோற்றனையெனக்கலைஞர் சொல்லுனைவெல்வோ.........*
மாற்றமினியுன்னுட னுரைக்குமதுமற்றோர்... ... ... *
சேற்றினெதிர்கல்லெறிதல் செய்வதலதுண்டோ... ... ...*

(இ-ள்) யாவராலுந் துதிக்கப்பட்ட தில்லைமூவாயிரவர்கள் இதுசொன்ன புத்தகுருவைப்பார்த்து கோபித்து உன்னை வித்துவான்கள் தோற்றாயென்று சொல்லும்படி செயிப்போம்-இனி உன்னுடனே பேசுவது சேற்றின்மேல் கல்லெறிவதுபோ லல்லாமல, வேறுண்டோ வென்றார்களென்றவாறு. (௨௬)

நன்றிதருவாருமொருவ னிகழாசெய்தா... ... ...*
னின்றதன்வெகுட்சியை நிறுத்தல்கடனுமா ... ... *
லின்றிழியநின்னுட னிகழ்ச்சியெனினுஞ்சி... ... ...*
றொன்றுமிலையாவுனை யொருசொலில்வெல்வோம் ... *

(இ-ள்) ஒருத்தருக்கு நன்மையைச் செய்யப்பட்ட பெரியோர்களும், ஒருவரவனது பிழைத்தால், அங்கேநின்று அதன்கோபத்தை ஆற்றுவது முறைமையாகுமென்பார்-ஆதலால், இன்று இழிவினையுடைய உன்னோடு பேசுகிறது நமக்குத் தகாதகாரியமானாலும், சிறப்பொன்றுமில்லாத உன்னை ஒருசொல்லிலே செயிப்போமென்றார்கள் - தில்லைமூவாயிரவ ரென்றவாறு. (௨௭)

மிக்கதிறன்மன்னவரு மெய்யுணர்வினோருந் ... ... *
தொக்கசபைமுன்னர்நம தர்க்கவுரைசொன்னாற்... ...*
தக்கதெனலாமிது தகாததிதுவென்று ... ... *
லெக்கலகமும்மிலையிதேகருமமாமால் ... ...*

(இ-ள்) மிகுந்த திறலையுடைய அரசர்களும், மெய்யுணர்வினையுடைய பெரியோர்களுங் கூடியிருக்கின்ற சபையெதிரே நம்முடைய தர்க்கவார்த்தையைச்சொன்னால், இதுதக்கது-இதுதகாதென்று- அவர்கள் சொல்லுவார்களானால்- எந்தக்கலகமுமில்லை, இதுவேகாரியமாகுமென்றார்-தில்லைமூவாயிரவர் என்றவாறு. (௨௮)

உத்தரமுரைக்கவறியா துபுலியூரார் ... ...*
புத்தனைமுனிந்தனர் புடைத்தனர்களென்றே... ... *
யித்தலமுரைத்துவிடு மென்றுவளவன்பான் ... ... *
மெய்த்தவருரைத்தெழுது மோலையைவிடுத்தார் ... .. *

(இ-ள்) உத்தரஞ் சொல்லமாட்டாமல், தில்லைமூவாயிரவர்- புத்தகுருவைக் கோபித்தார்கள்-அடித்தார்களென்று இந்தவுலகஞ் சொல்லுமென்

று சோழராஜனை வரும்படி ஒருஓலை யெழுதிவிட்டார்கள்-இவர்களெ
ல்லாம் என்றவாறு. (உ௯)

அந்தணர்பெருந்தவ ருங்கலையுணர்ந்தோர் ... ... *
வந்தனுகுநாளைமணி மன்றுதொழவென்றே ... ...*
புந்திமிகுமோலைபல போக்கியபின்வெய்யோன் ... ... *
மூந்துறவெளித்தனன் முனைத்தனைநிராவோன் ... ...*

(இ-ள்) பிராமணர்களும்- பெரிய தபோதனர்களும்- அரிய கலைக்கியா
னத்தில் வல்லவரும்- நாளைச் சிதம்பரத்தைத் தெரிசிக்கவந்து சேருமெ
ன்று புத்திமகிழும்படியாகிய பலவோலைக ளெழுதிவிட்டார்கள் - அப்
போது சூரியன்மறைத்தான் சந்திரனுதயமானான்-எ-று. (௩௰)

(வேறு.)

ஆங்கவானென் னுமாதின் சுடர்நுதற்றிலதமென்னக் ... ...*
கங்குலாமடந்தைபார்க்குங் கவின்கொள்கண்ணாடியென்னச்
சங்கவார்குழையாரிட்ட தரளவெண்கவிகையென்னத் ..... *
திங்கண்மாகடவுட்டோன்றச் சிறந்ததுஞாலமெல்லாம் ... *

(இ-ள்) உயர்ந்த ஆகாசமாகிய மங்கையினுடைய ஒளி விளங்குகின்ற
நெற்றியிலணிந்த திலதப் பொட்டுபோலும், இரவாகிய மங்கையானவள்
பார்க்கும் அழகுபொருந்திய கண்ணாடிபோலும், நெடிய சங்கக்குழை
யையுடைய பரமசிவனுக்கிட்ட ஒருவெள்ளிய முத்துக்குடைபோலும்,
சந்திரன்றோன்ற உலகமெங்கும் சிறப்புப்பெற்றது-எ-று. (௩௧)

இன்றொருதினமுந்தோரா விங்கிருநாளையாங்க ... ... *
ளுன்றனதுயர்ச்சியின்மை காட்டுவோமுலகிற்கென்று ... *
நன்றிகொண்மனையிற்சென்றே யாருநல்லுணவுமாந்தி ...*
யன்றிருண்மேன்மையாள ருந்துயில்பயிலுங்காலை .. ...*

(இ-ள்) இன்றொரு பொழுதுமாத்திரம் புத்தனே? யிங்கிருப்பாய் யா
ங்கள் நாளை உன்னுடைய தாழ்வை உலகத்திற்குக் காட்டுவோமென்று
நன்மையைக்கொண்ட வீட்டிற்குப்போய் அறுசுவையும் நிறைந்த நல்ல
உணவையுண்டு அன்றிராத்திரி மேன்மைபொருந்தியவர்களெல்லாம் நித்
திரைசெய்யும்போ தென்றவாறு. (௩௨)

அழகுறமன்றிலாடு மையர்கைப்பிரம்புதாங்கித் ... ...*
தழைசடைமுடியுமேனி சாத்தியநீறுமாகி ... ... *
விழைதருவடிவங்கொண்டு வெளிப்படக்கனவில்வெய்யோ
னெழுவதன்முன்னமெய்தி யாவர்க்குமிதுபகன்றான் ... ...*

(இ-ள்) அழகுபொருந்திய பொன்னம்பலத்தில், திருத்தஞ்செய்கின்

றசபாநாயகரானவர் கையிற்பிரம்புகொண்டு தழைந்த சடைமுடியும் திருநீறணிந்த திருமேனியும் உடையவராய் எல்லோரும் விரும்புகின்ற திருவடிவங்கொண்டு சூரிய உதயமாகுமுன்னேவந்து கனவிலே எல்லோர்க்கும் இது சொன்னார்-எ-று. (௩௩)

வருந்துவதொழிமினம்மூ ரெல்லையில்வைகியென்பா.....*
விருந்தனன்வாதவூர னிவ்வுரைகேட்டபோதிற்...... ......*
பொருந்தியதர்க்கநூலாற் புத்தனைவெல்வானின்னே ......*
யருந்தவமுடையநீர்போ யழைத்திடுமவனையென்றார் ... *

(இ-ள்) வருந்துவதை யொழியுங்கள் நம்முடைய தில்லைமாநகரத்து எல்லையில் திருவாதவூரனாகிய மாணிக்கவாசகனிருக்கின்றான், இந்தச்செய்தியைக்கேட்டால் பொருந்திய தர்க்கசாஸ்திரத்தைக்கொண்டு புத்தனை வாதுசெய்து வெல்வான், ஆதலா லிப்பொழுதே அரியதவத்தையுடைய தில்லைமூவாயிரவரோ? நீங்கள்போய் அவனை யழையுங்களென்றார் சபாநாயகமான்றவாறு. (௩௪)

கண்டனர்கனவுதன்னில்விழித்தனர்கனகமன்றி..........*
லொண்டொடிபாகனன்பா லுரைத்ததுகருத்திலாய்ந்து .. *
கொண்டனர்மகிழ்ச்சிசெங்கைகுவித்தனர்முடியிற்கோயின் *
மண்டபமிசையிலெல்லாமந்தருய்வந்துதொக்கார்....... *

(இ-ள்) இப்படி சொற்பனத்திலே கண்டார்கள்-பின்பு விழித்தார்கள்- பொன்னம்பலத்திலே உமாதேவிபாகராகிய சபாநாயகர்- அன்பினாலே சொல்லியதைக் கருத்திலாராய்ந்து மகிழ்ச்சிகொண்டார்கள்- சிரசின்மேலே சிவந்தகையைக்குவித்தார்கள்- கோயின்மண்டபத்திலே எல்லாரும் வந்து சேர்ந்தார்கள்—எ-று. (௩௫)

புல்லறிவுடையபுத்தன்புகன்றதற்கிரங்கிப்பின்ன... ... ...*
றொல்லையில்கருணையான்வந்திருங்கனவதனிலெய்திச்.........*
சொல்லியமொழியினாலேசோதிகொண்முகத்தராகி... .. *
வல்லிருட்கிடைந்துவெய்யோன்வரவிரிகமலமொத்தார் ... *

(இ-ள்) அற்பவறிவையுடைய புத்தகுருசொன்னபேச்சுக்கு இரக்கமுற்றுப் பின்பு அளவில்லாத கிருபையினாலே கடவுள் கனவிலேவந்து சொல்லிய சொல்லினாலே முகமலர்ச்சியுடையவராய் இருளுக்கு ஒதுங்கிப் பின்பு சூரியன்வர விரிந்த தாமரைமலரையொத்தார் தில்லைமூவாயிரவரென்றவாறு. (௩௬)

தெய்வீகமானமன்றிற்றிருநடம்புரியுநாதன்... ....*
றைவருநீறுஞ்செய்யசடையுறம்பிரம்புமாக...... ....*

மைவிரிகங்குற்காலைவந்துநன்மகிழ்ச்சியெய்த...... .. .. *
விவ்வகைமொழிந்தாரென்றேயாவருங்கனவுசொன்னார் ...*

(இ-ள்) தெய்வீகமான சபையிலே திருநடனஞ்செய்யுஞ் சபாநாயகர் விபூதி பூசிக்கொண்டு சிவந்தசடையும் நல்ல பிரம்பையுமுடையவராகக் கரியநிறத்தையுடைய இராத்திரியில் எழுந்தருளி நல்ல மகிழ்ச்சியடைய இப்படி அநுக்கிரகஞ்செய்தாரென்று யாவருந் தாங்கள்கண்டகனவைச் சொன்னார்களென்றவாறு. (௯௭)

அத்தனைமன்றுளாடுமையனைவியந்துகூறித்...... ....*
சித்தமிலன்புகூர்ந்துதனித்துளம்வருத்தநீங்கி... ....*
மெய்த்தவவாதவூரர்மேவிடத்தணுகுவோமென்... ... ...—*
றுத்தமபன்னசாலையொல்லையிற்குறுகினார்கள்...............*

(இ-ள்) அத்தனாகியும், சிற்சபையிலே நிருத்தஞ்செய்கின்ற ஐயனாகியும், இருக்கின்ற சபாநாயகனை அதிசயித்துச்சொல்லித் தங்கள்தங்களுக்குள்ளே அன்பு மிகுந்து தனித்து மனவருத்தநீங்கி மெய்த்தவத்தையுடைய மாணிக்கவாசகர் இருக்கின்றவிடத்திற்குப்போவோமென்று உத்தமமாகிய பன்னசாலையிற் சீக்கிரத்திற்போனார்கள் தில்லைமூவாயிரவர்-எ-று.

கூடினர்பன்னசாலைகூரருட்குன்றையன்பா ....*
னாடினர்நயந்துகண்டார்நளினவாசனத்தினெய்திப் ....*
பீடினிருந்தயோகம்பெயர்ந்தனர்வியந்துமன்றி .. .. *
லாடினானருளைத்தவெல்லாமங்கவர்க்கியம்பினார்கள்... ......*

(இ-ள்.) அப்படிபோனவர்கள்பன்னசாலையிலிருக்கின்றசிறந்தகிருபாமலையாகிய மாணிக்கவாசகனை அன்பினாலேதேடி நயப்புடனேகண்டார்கள் அப்போது அவர்பதுமாசனத்தின்மேலிருந்தயோகம்நீங்கினார் அதுகண்டு சபாநாயகர்களவிடத்திலேவந்தநுக்கிரகஞ்செய்தவையெல்லாம் அவருக்குச்சொன்னார்கள் தில்லைமூவாயிரவர் என்றவாறு. (௯௮)

(வேறு.)

அந்தமொழியல்பினர்செவிப்புலனிலங்குதலுமன்பிலுறைபணித்தனரா, வந்தவருடன்கடிதுசென்றுதிருமன்றனைவணங்கியருள்பெற்றமையலாரு, சிற்சபையிருந்தமணிமண்டபமதெய்தியவர்தீயமுகநாடிவிட்டோ, நற்றுமெனவேயெழினிகொண்டுமறைவித்தெதிரிருந்தனர்நலங்கொளனைமேல் .... *

(இ-ள்) அந்தத்திருவார்த்தையானது மாணிக்கவாசகர்செவியினிடத்திலேசேர்ந்தமாத்திரத்தில்முன்னேகடவுள்சொல்லியிருப்பதை நினைத்து வந்த தில்லைமூவாயிரவருடனே சீக்கிரம்போய் அழகிய சபாநாயகனைவ

ணங்கி கிருபையைப்பெற்றுப் பௌத்தர்களிருந்த மண்டபத்திற்குப் போய் அவர்கள் தீமையுள்ள முகத்தைப்பார்த்தால் அன்பமுண்டாகுமென்று திரைபோட்டுக்கொண்டு ஆசனத்தின்மேலெழுந்தருளியிருந்தாரென்றவாறு. (சுய)

மன்னுமறையந்தணர்புராணிகருங்கலைகள்வல்லவர்நல்லோர்களுட
னே, சென்னிவளவன்கடிது வந்துதிருமன்றினெதிர்சென்றுமுதா
மூதங்கணைகலா, மின்னுமணிமண்டபமதெய்தியருள்பனைவியந்த
டிவணங்கியருகா, தன்னரணையின்புறமிருந்தனன்விரிந்தகலைநாணி
றைவுகொண்டமதிபோல ....*

(இ-ள்) நிலைபெற்ற வேதப்பிராமணர்கள்-புராணிகர்-கலைஞானவல்லவர்கள்-பெரியோர்களுடனேசோழராஜாசீக்கிரத்தில்வந்து அழகியசபாநாயகனைத்தெரிசனம்பண்ணிக்கொண்டு அதைவிட்டுப்பிரகாசம்பொருந்தியரத்தினமிட்டிழைத்தமண்டபத்திற்குவந்து கிருபைமிகுந்தமாணிக்கவாசகர் திருவடியைவணங்கி அவருக்குப்பக்கத்திலேபூரணசந்திரன்போல ஆசனத்திலிருந்தான்—எ-று. (சுக)

ஈழவளநாடனுமெழுந்தடிபணிந்து திலை யிட்டகுறைநல்கியிறை
வா, வாழிமிகவாழியென நின்றபொழுதங்கவனை மன்னர்பெருமா
னுமகிழா, வேழமிவைதலைவிலையிலையிமணிக்கெனவியந்தருகிரு
த்தியெவரும், சூழுமவைதங்குமுழியக்கடலிருந்தனர்கள் சூழ்ந்து
கரிசொல்லுமயமேலார் ....*

(இ-ள்) ஈழதேசத்துராஜனும் எழுந்து சோழராஜாவைப்பணிந்து குறையாகவிருந்த திறையையுங்கொடுத்து அரசனே! மிகவும் வாழக்கடவாயென்று துதித்தபோது அந்த அரசனை அரசர்க்கரசனாகிய சோழராஜாவும்சந்தோஷித்து நீகொடுத்தயானைமெத்தவும்நல்லதாயினை, நீகொடுத்தரத்தினத்துக்குவிலையில்லையென்று அதிசயித்து பக்கத்திலிருக்கச்சொல்லி எல்லோருஞ்சூழ்ந்திருக்குஞ்சபையினிடத்திலே பக்கத்திலிருந்தார்கள், ஆலோசித்து சாக்ஷிசொல்பவர்கள்—எ-று. (சுஉ)

தில்லைநகரந்தணர்தம்போதனர்சிறந்தினி திருந்துழிவிரிந்தசிவஞானா,
வல்லவரிழிந்தகுண புத்தனுடன்வாது செயு மன்னுசபை காணவரு
வோர், தொல்லைமறைதந்தவன் முகுந்தன்முனி வோரொழுவர் சூழு
மிருநான்குதிசைமே, லெல்லையிலிருப்பவருருத்திரர்கள்விஞ்சைய
ரிராப்பகலிலங்குகதிரோர் ....*

(இ-ள்.) தில்லைமூவாயிரவர்களும், முனிவர்களும், சிறப்பாகவிருந்தபாத்திரத்திலே மாணிக்கவாசகர்-இழிவுபெற்ற குணத்தையுடைய புத்தனு

டனேவாதுசெய்யும் நிலைபெற்ற சபையைக்காணவருபவர்கள் யாவரென்றால், பிரமதேவன் - மகாவிஷ்ணு - சப்தமுனிவர்கள் - அஷ்டதிக்குப்பாலர்கள் - உருத்திரர்கள் - விஞ்சையர்கள் - இரவும்பகலும் விளங்குகின்றசந்திரசூரியர்களென்றவாறு. (௬௩)

(வேறு.)

தன்பெருந்தானைசூழவிருந்ததன்பொன்னிநாடன் ... ...*
றென்பெருந்துறையூர்நாடன்றிருவடிவணங்கிநின்று ... ...*
நின்பரஞ்சைவஞானநிலைமையைநிறுத்தல்பின்னை... ......*
யென்பரம்புத்தர்தம்மையிங்குயிர்செகுப்பமதென்றான் ... *

(இ-ள்) தன்னுடையசேனைகளெல்லாஞ் சூழும்படியிருந்த சோழன் மாணிக்கவாசகர் திருவடிகளைவணங்கிநின்று சுவாமி? உம்முடைய பாரம் சிவஞானநிலைமையை உலகத்திலேநிறுத்துவது என்பாரம் புத்தரை உயிர்போக்குவதென்றானென்றவாறு. (௬௪)

வளவனிவ்வகையிற்கூறவந்தபொய்ப்புத்தரெல்லா... ......*
முளமயர்வெய்தவாதவூரருண்மகிழ்ச்சியெய்திக்...........*
களவுடைபசர்வாய்வந்தகாரணமுரைநீயென்னக்.............*
கிளர்செவிநுழைவேல்போலக்கேட்டவனிதனைச்சொல்வான்*

(இ-ள்) இப்படிசோழராஜன் சொல்லவத்திருக்கின்ற அபத்தம்பேசும் புத்தர்களெல்லாம் மனவருத்தமடைய மாணிக்கவாசகர் மகிழ்ச்சியடைந்து புத்தனைப்பார்த்துத்திருட்டுவார்த்தைசொல்லப்பட்டவனே? நீவந்தகாரணத்தைச் சொல்லென்றுகேட்க வேலாயுதஞ் செவியிலேநுழைந்தது போல்அவ்வுரைகேட்டபுத்தனுமவன் இதைச்சொல்வானென்றவாறு. (௬௫)

மன்னுமெங்கடவுளல்லான்மற்றிலைகடவுளென்றே ......*
யிந்நெடும்பதியிலெய்தியியம்பியிங்கெவருங்காணப் ... .. *
பொன்னினம்பலத்தேயெங்கள்புத்தனைவைத்தல்வேண்டி *
றென்னைவந்திருந்தேனெங்கு வேறிலைநினைத்ததென்றான் *

(இ-ள்) நிலைபெற்ற வெங்கள் தெய்வமல்லாமல் வேறேதெய்வ மில்லையென்று இந்த ஊரில்வந்து சொல்லி இங்கே யெல்லோருங் காணப் பொன்னம்பலத்திலே எங்கள்புத்தனை வைக்கவிருப்பி நேற்றே வந்திருக்கின்றேன் இதல்லாமல் யானினைத்தது வேறொன்று மில்லையென்றான் புத்தகுரு வென்றவாறு. (௬௬)

என்றலும்வாதவூரெம்மிறைவர்புன்முறுவலெய்தி... ......*
மூன்றவமொன்றுமில்லாய்முயலிபமரவதுண்டோ.........*

நன்றதுநிற்கவுன்றனைப்பெருங்கடவுடானுஞ்...... ......*
சென்றவனடியிற்சேருஞ்செய்தியுங்கூறுகென்றார் ... ...*

(இ-ள்.) இப்படியென்றுசொல்லியவளவில் மாணிக்கவாசகர் புன்னகைகொண்டு முன்பிறப்பிலே தவமொன்றுமில்லாதவனே?முயல் யானையாவதுண்டோ நல்லது அதுநிற்க, உன்னுடைய நல்லபெரிய தெய்வமும் ஆத்மாக்களவனடியிற் சேருஞ்செய்தியுஞ் சொல்லென்றுகேட்டாரென்றவாறு. (சஎ)

அண்ணலாருரைத்தபோதிலங்கவன்வெகுட்சியெய்திக்.....*
கண்ணிலாதவர்க்குவெப்போன்கதிரொளிகாட்டலாமோ...*
நண்ணலாவெங்கணாதனற்புகழுரைக்கின்று...... ....*
வெண்ணிலாயிரங்கல்வேண்டுமென்றுபினிதுபுகன்றான் .. *

(இ-ள்) இப்படி மாணிக்கவாசகர் சொன்னவளவில் அந்தப்புத்தகுருவானவன் கோபமடைந்து கண்ணில்லாதவனுக்குச் சூரியகிரணத்தினொளியைக் காட்டக்கூடுமோ, பொருந்துவதற் கரிதாகிய எங்கள்புத்ததேவனுடைய நல்லகீர்த்தியைச் சொல்லவேண்டுமானால் நல்லநாவானவைகள் பல்லாயிரம் வேண்டுமென்று பின்பு இதுசொன்னானென்றவாறு. (சஅ)

அறந்திகழ்பிடகநன்னூல்லாதியன்புடையனுகிப்...... ...*
பிறக்குபல்யோனிதோறும்பிறந்துயிர்க்குறுதிசெய்து ... *
மறந்தருகோறலாதிநால்வகையொழிந்துமேன்மை... ... *
சிறந்துளபோதிநீழற்சேர்வனம்மிறைவனுவான்... .. ...*

(இ-ள்)தருமம்விளங்குகின்ற நல்லபிடகாகமமுஞ்சொல்லி அன்பையுடையவனுய்ப் பிரகாசிக்கின்ற அனேகயோனிகள்தோறும்பிறந்து ஆத்மகோடிகளுக்கு உறுதிசெய்து பொல்லாங்கைத்தருகின்ற கொலை - களவு-பொய்-கள்ளுண்ணல்- என்னும்நான்கு குற்றங்களையும் நீக்கி மேன்மைசிறந்திருக்கின்ற அரசமாநிழலின்மேல்சேர்ந்திருப்பானெமது கடவுள்எ-று.

மேவியகருவிற்சேருமுருவம்வேதனைகுறிப்புப்... ... ...*
பாவனையுடன்விஞ்ஞானம்பஞ்சகந்தங்கள்கூடி ....*
யோவில்பல்லுணர்வுண்டாக்கியொழிவதுபிறவித்துன்ப...*
மாவதுபொன்றக்கேடாயழிவதுமுத்தியென்றான்...... .. *

(இ-ள்) பொருந்திய கருப்பத்திற்சேருகின்ற உருவம்வேதனைக் குறிப்புப் பாவனைவிஞ்ஞானம் ஆகிய பஞ்சகந்தங்களுங்கூடி ஒழிவில்லாதஅனேக அறிவுண்டாய நீங்குவது பிறவித்துன்பமாம், அதுநீக்கக் கேடாயழிவது மோக்ஷமென்றானென்றவாறு. (ருய)

வாதவூரண்ணலாரும்வண்புனற்பொன்னிநாடன் ... ...*
றீதிலாமுகத்தினூடேசிறந்தருட்பார்வைநல்கிப் ....*
பேதையாயறிவில்லாமையிற்றுணையசரும்புத்தற் ... .*
கேதியாமின்றுசொல்வதென்றபினிதுபுகன்றார் ....*

(இ-ள்) அப்போது மாணிக்கவாசகரும் நீர்வளமிகுந்த காவேரிசூழ்ந்த நாடனாகிய சோழராஜாவினது களங்கமற்ற முகத்தைப்பார்த்துக் கிருபாநோக்கஞ்செய்து அறியாமையினால் மயக்கங்கொண்டு பயித்தியவார்த்தைசொல்லும் புத்தனுக்கு இன்று யாமென்னசொல்வதென்று பின்பு இதுசொன்னாரென்றவாறு. (௫௧)

தருமநூலுண்டென்றுநன்னூற்சாற்றினன்றலைவனென்னை *
மருவியவுணர்வுண்டாகிமறைந்திடுங்கணத்திலென்னை ... *
பொருளுடனானாநீதேடிப்புகலுறுமுணர்வுபோனால் ... *
இருடருநின்னூல்சொல்வதெப்படிகூறல்வேண்டும் .. ...*

(இ-ள்) தருமநூலுண்டென்று புத்தனானவன் பிடகநூல் சொன்னானென்றாய் பொருந்திய அறிவுதோன்றி க்ஷணநேரத்தில் மறைந்துபோமென்றாய் சொல்லும்பொருளும் நீ தேடிசொல்லுமுன்னே உணர்வுகெட்டால் அஞ்ஞானத்தைத்தருகின்ற உன்னூல்சொல்வதெப்படிசொல்லென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௫௨)

ஆதலாலறநூலென்பதுனக்கில்லையுயிர்கட்காகப் ....*
பேதையாப்யோனிதோறம்பிறந்தனனிறைவனென்றாய் ... *
தீதுசேரொருவர்மாலைத்தீர்க்கவந்தவர்கடாமும் ....*
போதமால்கொள்ளிலம்மால்போதவந்துள்ளதாமோ ... ... *

(இ-ள்) ஆகையினாலே தருமசாஸ்திரமென்பது உனக்கில்லை, ஆத்மாக்களுக்காக அநேகம் யோனிகள் தோறும் உன்கடவுள்போய்ப் பிறந்தானென்றாய் குற்றம்பொருந்திய ஒருவர்மயக்கத்தைத் தீர்க்கவந்தவர்களும் அதிகமயக்கத்தைக் கொண்டால் அந்தமயக்கம் போகுமோ வென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௫௩)

கொல்வதுகருதாவெங்கள்கோவெனவுரைத்தாய்முன்னம் *
பல்வகையோனிதோறும்பார்மிசைப்பிறக்குநாளில் ..... *
வெல்படவிநரியேயாகிவெம்பசியுற்றுன்மற்றிப் ... .*
புல்லொடுதழையோதின்பானின்பெரும்போதிநாதன் ... *

(இ-ள்) எங்கள்கடவுள் கொல்லநினையானென்று சொன்னாய், முன்னே அனேகயோனிகள்தோறும் பூமியில்மேற் பிறக்குங்காலத்தில் வெல்லுகின்ற புலிகளாயும், நரிகளாயும், பிறக்கும்போது வெவ்வியபசிவந்தால்

புல்லுந்தமையுந் தின்பாரோ? அரசமர நிழலிலிருக்கும் உன்னுடைய கடவுளென்றவாறு. (௫௪)

கரவெனுமூன்றநூலிற்கந்தமைந்துடனேகூடி ....*
யுருவமாமழியுமென்றாயுன்னிறைகுருவுமெங்கே... ... .. *
விரவியயோனிதோறுமுயிர்க்கருள்செய்யவேண்டி ... ...*
மருவொருவடிவங்கொண்டானென்பதேமதியிலாதாய் ... *

(இ-ள்) பொய்யாகிய உன்னாகமத்தில் ஐந்துகந்தங்களுடனே கூடத் தேகமுமழியுமென்று சொன்னாய், அப்போது உன்கடவுளுக்கு உருவேங்கே? அனேகயோனிகளில் ஆத்மாக்களுக்கு அருள்செய்யும் பொருட்டு ஒருவடிவங்கொண்டு வந்தானென்பதென்ன-புத்தியில்லாதவனே யென்றார் மாணிக்கவாசக ரென்றவாறு. (௫௫)

காரணவுயிரிற்கூடுங்காரியவுருவின்றேனுன் ....*
சீரணிபோதிநீழற்சேரிறைக்குருவுமில்லை ....*
பூரணஞானமில்லாப்பொன்றுகைமுத்தியென்னும் .. ... *
பேருணர்வில்லாவுன்றன்பிடகநூல்யாவர்சொன்னார் .. .. *

(இ-ள்) காரணமாகிய ஆத்மாவோடே கூடுகின்ற காரியமாகிய வடிவில்லாதிருந்தால் உன்னுடையசிறப்புப்பெற்ற அரசமரநிழலிலேயிருக்குந் தெய்வத்துக்கு வடிவில்லைநிறைந்த அறிவில்லாதவனே; பஞ்சகந்தமுங் கெடுவதுமுத்தியென்று சொல்லும் பேரறிவில்லாத உன்பிடகாகமத்தை யார்சொன்னா ரென்றவாறு. (௫௬)

இருபதின்றொருவராகவெண்ணுமுன்புத்தரெல்லாம் ... ...*
வருவதுசிறந்ததாயர்வயிறிலைப்பீறியென்னை... .. .. *
பரிவொடுசுமந்துபெற்றாருயிர்கெடப்பழுதுசெய்தே .. *
யருநரகத்தில்வீழ்மவர்களோகடவுளாவார்...... ....*

(இ-ள்) இருபத்தொருவ ரென் றெண்ணப்பட்ட உன்னுடைய புத்தர்களெல்லாம் பிறப்பது சிறப்புப்பெற்ற தாயார் வயிற்றைப்பீறியென்று சொன்னாய் அன்புடனேசுமந்துபெற்ற தாய்மாருடைய உயிர்நாசத்தை யடைய குற்றஞ்செய்து அரியநரகத்திலே வீழ்வார்களோ தெய்வமாவார்க ளென்றவாறு. (௫௭)

காவுடைப்பூத்நான்கின்கலப்பினிற்பேதமல்லா............*
துருவினுக்குயிர்வேறில்லையென்னைநின்பொய்ம்மைநூலி*
னிரவினிற்றயிலுங்காலுன்மூகத்துடனேறிப்போகு... ...*
மரவிணைப்பூதபேதமறிந்ததோவறிவிலாதாய்...............*

ளாசய புத்தனைவாதில்வென்றசருக்கம்.

(இ-ள்) ஒளிப்பினையுடைய நான்குபூதத்தையுடைய கலப்பிலே பேதபேயல்லாமல தோன்றியவடிவுக்கு உயிரொன்று வேறில்லை யென்பாய் நீ சொல்லிய அபத்தசாஸ்திரத்தில இராத்திரியிலே நித்திரைசெய்யும்போது உன்முகத்திலே யேறிப்போகும் சர்ப்பத்தை யிந்தப்பூதங்க ளறிந்ததா! வறிவில்லாதவனே யென்றவாறு. (௫அ)

உருவமுமுயிருங்கூடுமுணர்வுனக்கில்லையிந்த ...... *
வுருவமிக்கிறந்தகாலையுயிரகடிதகன்றபோகு - ... ...*
முருவமுமுயிருங்கூடிப் பிறக்குமேலதனாலுன்ற .. ..*
னுருவமுமுயிரும்வேறாமென்றலாயுன்றன்வாயால் ......*

(இ-ள்) உருவும்-உயிரும்-ஒன்றாய்க்கூடும் அறிவு உனக்கில்லையென்றாய், இந்தஉருவம் நீங்கினகாலத்தில் உயிரும் சீக்கிரத்தில் நீங்கிப்போகும் உருவமும் உயிரும் ஒன்றாய்க் கூடப்பிறக்குமானால் அதனால்உன்னுடைய உருவும்உயிரும் வேறாகுமென்று உன்வாயாற்சொல்வாயென்றார் மாணிக்கவாசக ரென்றவாறு. (௫௯)

வானரூபமில்லைவானத்தோசையுமில்லைவான...... ....*
மானதிவ்வழக்கதாமென்றாற்றனையுன்றனூலிற்... ... .. *
கானிலம்புனற்றீநான்குங்கலப்பதற்கிடமதாகு............ *
நீறவிலோசைவானினிகழ்ந்ததுளசெய்தியென்பாய்...... ...*

(இ-ள்) ஆகாசரூபமில்லை,அதனிடத்தே சத்தரூபமில்லை, அந்த ஆகாசம் இல்வழக்காமென்று சொன்னாய், உன்னுடைய மதத்தில் பிருதுவி-அப்பு-தேயு-வாயு- நான்குபூதமும்- இருப்பதற்கு இடம்,ஆகாசமல்லவோ? நீ சொல்லப்பட்ட சொலவினோசை ஆகாசத்திலுண்டாகியதென்றுசொல்லுவாயென்றார்மாணிக்கவாசக ரென்றவாறு. (௬௰)

இடமிருந்திசைதானென்பதில்வழக்கென்னுநீயே ....*
வடநெறித்திசையிற்போதிமரமெனவணக்கஞ்செய்வை .. *
புடவியிலறிவிலாரும்பித்தரும்பொய்மையோரு ... ...*
முடனிகழவையிற்கூறிலொக்குநீயுரைப்பவெல்லாம் ......*

(இ-ள்)இடமிருந்த திசையென்று சொல்வது இல்வழக்கென்று சொல்வாய், இப்படிசொல்லுநீயே நெடியவடதிசையிலே அரசமரமிருக்கின்றதென்று வணக்கஞ்செய்வாய், பூமியிலே அறிவில்லாதவர்களும்,பயித்தியங்கொண்டவர்களும்,அபத்தம்பேசுகிறவர்களும், இருக்கின்ற சபையிலே உன்சொல்லெல்லாம் பொருந்துமென்றார் மாணிக்கவாசக ரென்றவாறு. (௬௧)

மரமுயிரல்லவென்பைமன்னுமைம்பூதமான... ... ...*
வுருவினர்போலநன்னீருணவினாற்றிலைகொண்டோங்குஞ் *
சருகெழுமுணவின்றேலாதலாற்சனனபேதத்.. ....*
தருவினையருத்தவெங்கோனுருயிர்க்கமைத்ததென்பாய் ... *

(இ-ள்) மரங்கள்உயிரல்லவென்று சொல்வாய், நிலைபெற்ற பஞ்சபூதத்தினாலுண்டாகிய தேகத்தையுடையவர்கள்போல நல்லநீரை உண்கையினாலே இலைகள்தளிர்த்து வளர்ந்திருக்கும், அஃதில்லாவிட்டால் சருகாகும் ஆகையினாலே செனனபேதத்தில் கன்மங்களைப் புசிப்பிக்கஎமதுகடவுள் உயிர்களுக்கு அமைத்த வடிவாகுமென்று சொல்வாரென்றவாறு.

வன்பெரும்பழுதுகோறன்மண்மிசைத்தானேசெத்த .....*
புன்புலைதின்னனன்றென்றுரைப்பைநின்பொய்ப்பைநூலிற் *
றின்மையென்றுனக்குநல்லூனுடலுயிர்செகுத்தேயூட்டி *
யுன்பசிதணிப்பார்பாவமெய்துவதுனக்குநன்றோ...... ...*

(இ-ள்) ஒருஉயிரைக்கொல்வதுபழுது பூமியிலேதானே செத்தமாமிசத்தைத்தின்பது நன்றென்று சொல்வாய், உன்பொய்யாகமத்திலே நன்றென்று உனக்கு நல்லஉயிரைக்கொன்று மாமிசத்தை உண்பித்து உன்பசியைத் தணிப்பார்க்குப் பாபமடைவது உனக்கு நல்லதோ-எ-று. (௩௫)

காரணநிற்கவென்றுங்காரியங்கெடுதல்வீட்டென் .. ..*
றாரணம்பரவுமெங்கோனாகமம்புகல்வார்சொல்வர் . ...*
போரணக்குயிருஞ்சேரப்பொன்றுதன்முத்தியென்னும் *
பேரணக்குற்றநீயேபிரிவறியாதுசொலவாய் ... ...*

(இ-ள்) காரணமிருக்க எப்போதுங் காரியங்கெடுவதே மோக்ஷமென்றுவேதங்கள்பரவுகின்ற எங்களுடைய கோனாகிய சிவனுடைய ஆகமஞ் சொல்லப்பட்டவர் சொல்லுவார்கள். போரால்வருந்தும் உயிருங் கூடக்கெடுவது முத்தியென்கிற பெரியவருத்தங்கொண்ட நீயேபிரிவை யறியாமற் சொல்வாயென்றவாறு. (௩௬)

அழிந்திடினைந்துகந்தமுத்தியென்றுரைத்தாயைந்து......*
மழிந்திடின்முத்திபெற்றாரெனவினவும்போதி . .....*
லழிந்திடுமைந்தினுண்டாமுணர்வெனவுரைக்கிலைந்து ... *
மழிந்தனவிலையாமுத்தியாவதுமில்லையென்றார்...........*

(இ-ள்) பஞ்சகந்தமும் அழிந்தால் முத்தியென்று சொன்னாய், பஞ்சகந்தமும் அழிந்தால் முத்திபெற்றவர் யாவரென்று வினவும்போதில் அழிந்த அஞ்சிலும் உண்டான அறிவென்றுசொல்லில் அப்போதுபஞ்

சகந்தரும் அழிபவுமில்லை மோக்ஷமுமில்லையா மென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௬௬)

(வேறு.)

பொங்குபுகழ்மங்கியுளபுத்தனும்வெகுண்டே...... ...*
யெங்கடவுளேதுபெறுமுத்தியிலையென்றீ...... ...*
ருங்கடவுள்யாதுமதுமுத்தியெதுவென்னத்........*
தங்குசிவஞானமுனைர்சைவரிதுசொல்வார்......... .. *

(இ-ள்.) மிகுந்தகீர்த்தியானது மங்கியிருந்த புத்தனுங்கோபித்து எங்களுக்குத் தெய்வமுமில்லை மோக்ஷமில்லை யென்று சொன்னீர். உம்முடைய தெய்வமாவதெது! நீங்களடையுமோக்ஷமெது வென்று கேட்கச்சிவஞானத்தையறிந்த சைவராகிய மாணிக்கவாசகர் இது சொல்வார்-எ-று.

ஆலமணிநீழலிலிருந்தறமுரைக்குங்....... ....*
கோலமதுகண்டிபலர்கும்பிடநடிப்பான்...... ......*
மேலணியுநீறனுமைகூறனருண்மேவுஞ் ....*
சீலனவனற்பெருமைசெப்பவெளிதாமோ...... ...*.

(இ-ள்) அழகிய கல்லாலினிழலிருந்து தருமஞ்சொல்லுகின்ற வடிவைக்கண்டு அனேகம்பேர் தெரிசிக்க நிருத்தஞ்செய்வான் விபூதிதரித்த திருமேனியையுடையவன் உமாதேவியை யொருபாகத்தி லுடையவன்கிருபையையுடையவன் இப்படிப்பட்ட கடவுளதுபெருமை சொல்வதற்கு எளிதோ வென்றவாறு. (௬௭)

தில்லைமணிமன்றிலுறைதிங்களணியெங்கோ...... ...*
னெல்லையுளதோமொழியவென்றருள்புரிந்தே......*
சொல்லுமளவிற்பலதொடுத்துமுயலாதே...... ......*
நில்லுமிதுகூறுமெனநீசனிதுரைத்தான்......... ...*

(இ-ள்) தில்லைமாநகரில் அழகிய பொன்னம்பலத்திலிருக்கின்ற சந்திரனையணிந்த எமதுகடவுளானவர் ஒருமுடிவு உண்டானவரோ? சொல்லுதற்கென்றசொன்னார், சொல்லுமளவில் பலபேச்சுகள் சொல்லமுயலவேண்டியதில்லைநில்லும், நான்கேட்டதைச்சொல்லுமென்று நீசனாகியபுத்தனிதுசொன்னா னென்றவாறு. (௬௮)

முன்னர்வடநீழலிலிருந்தறமொழிந்தா .... *
னென்னிறைவனென் னுமுனை யென்னெ னிருரைத்தீர்*
மன்னுசெபமாலைகொடிருக்குமதுமற்றோ....... ...*
ருன்னரியநற்கடவுளுன்னடைனினைந்தோ.......... ...*

(இ-ள்.) முன்னே கல்லாலின்கீழிருந்து தருமஞ்சொன்னான், எங்களு

டைய கடவுளென்று என்னெதிரே சொன்னீர், கையிலே நிலைபெற்றசெபமாலை கொண்டிருப்பது வேறொரு நினைத்தற்கரிய நல்லதெய்வமுண்டென்று நினைத்தோ வென்றவாறு. (௬௯)

மல்லுலகத்தவர்வணங்கிடநடிப்பன் ... ...*
தில்லையிறையென்னவுரைசெய்தனிர்முனிப்போ ...*
நல்லறிவிசேஷர்கள்சிலர்நாடவருண்டா...... ... ...*
யல்லதுதமிச்சைதனிலாடுமவருண்டோ... ... ...*

(இ-ள்) வளம்பொருந்திய உலகத்தார் வணங்கும்படிக்குச் சிதம்பரத்திலே நிருத்தஞ்செய்வான் எமதுகடவுளென்றுசொன்னீர், நினைந்துபோகப்பட்ட நல்லறிவையுடைய சிலர்பார்க்க, ஆடுவதல்லது தமதிச்சையினாலே ஆடுவாருமுண்டோவென்றான் புத்தகுருவென்றவாறு. (௭௰)

வையமுழுதுய்யமணிமன்றினுணடிப்போன் ....*
மெய்யணியுநீறனெனமேன்மைகொடுரைத்தீர் ... ...*
செய்யவொளிதங்குதிருமேனிதனினீறு...... ......*
துய்யதெனவோவுமதுதொல்லிறைபுனைந்தான் ......*

(இ-ள்) உலகமெல்லாம் பிழைக்க அழகியபொன்னம்பலத்திலே நிருத்தஞ்செய்யும் எமதுகடவுள் திருமேனியிலே விபூதிதரித்திருக்கின்றானென்று மேன்மைகொண்டுசொல்லினீர், சிவந்தபிரகாசந்தங்கிய திருமேனியிலே விபூதிபரிசுத்தமானதென்றோ! உமதுகடவுள் தரித்தானென்றான் புத்தகுருவென்றவாறு. (௭௧)

மங்கையொருபங்கினனவன்மைகொடுரைத்தீர்..... *
பங்குபடுபெண்வடிவுபார்மிசையிலுண்டோ........*
வங்கமொருபாதிடமாதிருவாறு.......... ... ...*
துங்களிறைநீர்துறவிலுற்றதவமென்னே............*

(இ-ள்) உமாதேவியை யொருபாகத்திலே யுடையவனென்று பெருமைகொண்டுசொன்னீர், பாதிதேகம் பெண்வடிவாயிருப்பது பூமியிலேயுண்டோ! அப்படிபாதிதேகம் பெண்ணுருவா யுமதுகடவுளிருந்தால்நீர்துறவியிலிருந்த தவமென்னென்றவாறு. (௭௨)

என்றவன்மொழிந்தபினிகழ்ச்சிநகைசெய்தே ... ...*
மன்றனடியார்கள்பெருவாழ்வுபெறவந்தார்...... .. *
நன்றியுபதேசமிதுநந்தவமிலாதா............ ... ...*
யன்றனைதிர்சொல்வதலவென்றிதுரைசெய்வார்......*

(இ-ள்) இப்படி யென்று அந்தபுத்தகுரு சொன்னதற்கு யிகழ்ந்துநகைசெய்து, எமதுகடவுளுடைய அடியார்கள் பெரியவாழ்வைப் பெறவ

ந்தவர்கள் நல்லுபதேசமாகிய விதனை நல்லதவமொன்றில்லாத உன்னை யிமோ சொல்வதல்லவென்று இதுசொல்வார் மாணிக்கவாசகர்-எ-று. (௭௩)

ஓங்குசெபமாலைகொடிருத்த லுலகெல்லா .... *
மீங்குயிர்தவங்கள் செயவென்றதெனவெண்ணாய் ...., *
தாங்கியடைத்தொழில்கள்சார்பொடுபழக்கம்.... .. *
பாங்குளபணிக்கர்கரபத்திரமதாகும் .. ..*

(இ-ள்) உயர்ந்தசெபமாலிகையைக் கையிலேவைத்திருப்பது உலகத்தாரெல்லாம் இங்கேஉயர்ந்ததவங்கள் செய்தற்கென்று நினையாய்தாங்கப்பெற்றஆயுதத்தொழில்களைச் சார்புடனே பழக்குகின்றபக்குவமுள்ள ஆசிரியருடைய கையிலேகொள்ளும் ஆயுதம்போலாகுமென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௭௪)

ஈட்டியதவப்பயனிலாதவர்கள்போலூ........ ....*
னாட்டமுடையாரெதிர்நடித்திடுவனென்றாய்...............*
காட்டவனல்போலுடல்கலந்துயிரையெல்லா.... .... *
மாட்டுமொருநட்டுவனெம்மண்ணலெனவெண்ணாய் .. .. *

(இ-ள்) தவப்பயனைச் சம்பாதியாதவர்களைப்போல ஊனக்கண்ணையுடையவராகிய உலகத்தார்காண எதிரே கூத்தாடுவாயென்றாய் விறகிலேயிருக்குந் தீயைப்போலத் தேகத்திலேவந்து உயிரையெல்லாம் ஆட்டுவிக்கும் ஒருநட்டுவன் எமதுகடவுளென்று எண்ணிக்கொள்வாயென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௭௫)

நீற்றினையணிந்ததுவெனினிறைவனென்றே... ... *
சாற்றினையுயிர்க்கிடர்தணிப்பதெனவெண்ணாய்...... *
தோற்றியுளதம்புதல்வர்துன்பமுறுமற்றோய்... ...*
மாற்றும்வகையன்னையருந்தியமருந்தாம்............*

(இ-ள்) உம்முடையகடவுள் விபூதியையணிந்தது என்னவென்றுகேட்டாய், அது ஆத்மாக்களுக்குத் துன்பத்தைத் தணிப்பதென்றெண்ணிக் கொள்ளாய், பிறந்திருக்கின்ற தம்முடையபிள்ளைகளடைந்தநோயை நீக்கும்படி தாய்மார் சாப்பிட்ட மருந்தாகுமென்றார் மாணிக்கவாசகரென்றவாறு. (௭௬)

புல்லறிவுகொண்டுபலபொத்துமொழிபுத்தா........ *
நில்லவலலாலொருவர்நீறணிவதுண்டோ......... .. *
நல்லதிருநீற்றினுளநன்குமறைதானே ....*
சொல்லுமதலாலொருவர்சொல்லவெளிதாமோ .. .. *

(இ-ள்) புல்லறிவைக்கொண்டு அனேகம் வீண்வார்த்தைகள் பேசுகின்

ற புத்தனே? திரிபாய்- அவனையல்லாமல், ஒருவர் நீற்றைத் தரிப்பதுண்டோ நல்ல திருநீற்றிலுள்ளசுகம்-வேதஞ் சொல்லுவதல்லாமல், மற்றொருவராற் சொல்வதற் கெளிதோ வென்றவாறு. (௭௭)

பாகமதிலுத்தமியை வைத்தல்பழுதென்றாய் ... *
போகமுலகுக்கருள் புரிந்தருளவென்றே ... *
மாகமுகிலொத்தகுழன் மங்கையொடிருந்தான் ... *
யோகமுயிர்கட்குதவ யோகவுருவானான்... ... *

(இ-ள்) ஒருபாகத்திலே உமாதேவியைவைப்பது குற்றமென்று சொன்னாய், உலகத்தாருக்குப் போகத்தைத் தரல்வேண்டுமென்று நினைத்து-ஆகாசத்திற்சஞ்சரிக்கின்றமேகத்தையொத்தகூந்தலையுடைய பார்வதியையொருபாகங் கொண்டிருந்தார்-அல்லாமலும், உயிர்கட்கு யோகத்தைக் கொடுக்கும்பொருட்டு யோகவுருவங் கொண்டிருந்தார் எமதுகடவுள்.

அந்தர்காமுற்றதடி யன்றியறியார்போ... ... *
விந்தமொழிகற்றனை யினிப்பிறிதுதேராய்... ...*
மைந்தபுனைசந்தவிடை யான்மலரின்மணனும்... *
கந்தமெனநின்றநிலை கண்டிலைகணில்லாய்... ... *

(இ-ள்) குருடர்கையி லிருக்கின்ற தடியையல்லாமல், வேறொன்றறியாத விதம்போல இந்தபேச்சுமாத்திரங் கற்றாயல்லாமல், வேறொன்றறியமாட்டாய் வலிமைபெற்ற அழகிய இடபவாகனத்தையுடைய பரமசிவன் பூவிற்கு மணம்போல ஆத்மாக்களிடத்தில், கலந்துநின்ற நிலைமையைப் பார்த்தாயில்லை கண்ணில்லாதவனே? யென்றார்-மாணிக்கவாசகர்- என்றவாறு. (௭௯)

ஆதிசிவயோகிமிகு போகியருவாகுஞ்... ... ...*
சோதிவெகுரூபிசுக வாரிதுயரில்லா ... ... *
நீதிமணிமன்றதனி னின்றநிலையல்லால் ... ... *
யாதுமுடியாதுபதம் யாரறிவரென்றார்... ... *

(இ-ள்) ஆதியாகியுஞ், சிவயோகியாகியும், மிகுந்த போகியாகியும், அரூபியாகியும், சோதியாகியும், வெகுரூபியாகியும், இன்பக்கடலாகியும், இருக்கின்ற கடவுள்-துன்பமில்லாத நீதிநிறைந்த பொற்சபையிலேநின்ற நிலையையல்லாமல், எதுசிரசு- எதுபாதம்- யார்-அவனை யறிவார்களென்றவாறு. (௮௰)

மைந்தர்மடவார்தமரு வாக்கிறைவிநீயே ... ...*
யிந்தவகைபொய்ம்மொழி யியம்புவதெனென்றே *
யந்தமிலவாகிய வருங்கலைகள்வல்லார் ... ... *
முந்துகலைமாதினை முனிந்திதுமொழிந்தார் ... *

(இ-ள்) அளவற்ற கலைகளில் வல்லவராகிய மாணிக்கவாசகர் மைந்தர்கள் - மங்கையர்கள் ஆகிய இவர்கள் வாக்கிலிருக்கின்ற சரஸ்வதி- நீயே பொய்வார்த்தை பேசுவதென்று ஆதியாகிய- கலைவாணியைக் கோபித்து இதுசொன்னாரென்றவாறு. (௮௧)

(வேறு.)

தொக்கர்நான்மறைசொல்லுநீயிவை சொல்வதென்கலைமாதராய்
தக்கன்வேள்வியிலுன்றனாசி தடிந்ததின்றுமறப்பதே ...*
முக்கணனருளில்லையென்றிடு மூகர்நாவையகன்றுநீ... ...*
நக்கனார்திருவாணையேனென நாமடந்தையுமஞ்சினாள்... ...*

(இ-ள்) நான்குவேதங்களையுஞ்சொல்லிய நீதானேயிந்தப்பொய்யைச் சொல்லவேண்டியதென்ன-சரஸ்வதி தக்கன்யாகத்தில், உன்மூக்கையறுத்ததை மறந்துவிடலாமா? திரிநேத்திரத்தையுடைய பரமசிவனது அருளில்லையென்று சொல்லும் மூடருடைய நாவைவிட்டு நீசிவனுடைய ஆக்கினைப்படி போவென்றுசொல்லச் சரஸ்வதியும்பயந்தாள்-எ-று. (௮௨)

அஞ்சிவஞ்சகர்நாவினின்று மகன்றபின்பவர்தாமெலா... *
நஞ்சருந்தினர்போலொடுங்கி நடுங்கிமூகர்களாயினார் ... *
நெஞ்சநொந்துயிலீழநாட னிறைந்தடுஞ்சிவஞானநூ .. *
லெஞ்சலின்றியசெல்வர்பாத மிறைஞ்சிநின்றிதுகூறினான் *

(இ-ள்) சரஸ்வதிபயந்து வஞ்சகருடைய நாவினின்றும்-நீங்கின பின்பு அவர்களெல்லாம் விஷஞ் சாப்பிட்டவர்கள்போல ஒடுங்கி-நடுங்கி- மூமைகளானார்கள் - அதுகண்டு மனநொந்து ஈழதேசத்துராஜன் சிவஞான நூல்களிற் குறைவில்லாத மாணிக்கவாசகர் பாதத்தை வணங்கிநின்று இதுசொன்னானென்றவாறு. (௮௩)

சொல்லவல்லவர்மூகையாயினர் சொல்லிலாவொருமூகையாம்
வல்லியென்புதல்விக்குமூகை மறைந்திடல்லுனாகூடினு *
னல்லதொண்டனுமக்குநானென நாயனாரவடன்னை நீ......*
யொல்லையிங்கழையென்னவந்தவ னுண்மைமேரவைதன்னினுள்

(இ-ள்) பேசத்தக்கவர்களூமையாயினார்கள்-பேச்சில்லாத ஊமையாகிய என்புத்திரிக்கு ஊமைநீங்கி நல்லவார்த்தை பேசவந்தால், நானுமக்கு நல்ல அடியனாவேனென்றுசொல்ல,மாணிக்கவாசகர்சீக்கிரத்திலே அழைத்துக்கொண்டு வாவென்றுசொல்ல, அவனும்-உண்மைபொருந்தியசபைக்குவந்தானென்றவாறு. (௮௪)

நண்ணியக்குழுவினின்றகன்னியை நன்மையாளருநாடியே *
கண்ணினின்னருள்செய்துபின்னர் கரைத்துமுன்னிருத்தியே
புண்ணடங்கியிருந்தபுத்தனுரைத்ததர்க்கமவைக்கெலாந் *
தண்ணறுங்குழல்வல்லிநல்லுரை சாற்றுகென்றுவிளம்பினார்

(இ-ள்) சபையிலே வந்துநின்ற கன்னிகையை மாணிக்கவாசகர் பார்த்து-கிருபாநோக்கஞ்செய்து-பின்பு அழைத்து- எதிரிலிருக்கவைத்து-உள்ளம்நடுங்கி அங்கிருந்த புத்தன்சொல்லிய தர்க்கத்துக்கெல்லாம் குளிர்ந்த வாசனைபொருந்திய கூந்தலையுடைய பெண்ணே? நீ யுத்தரஞ்சொல்லென்றார்—எ-று. (௮௫)

பற்றுநன்குணராதபுத்தர்பகர்ந்ததர்க்கமவைக்கெலாம்... *
கற்றறிந்தவர்போலமன்னிய கன்னிமாறுரைகூறினள் ... *
மற்றுமங்கையர்சாழலாம்விளை யாடலாகமகிழ்ச்சியா... ...*
அற்றதன்பொருடன்னைவாசகமாகவுண்மையரோதினார்...*

(இ-ள்) பத்தியை நன்றாயறியாத புத்தரானவர்கள்- சொல்லிய தர்க்கவார்த்தைக்கெல்லாம் படித்தறிந்தவர்கள்போல இந்தப் பெண்ணானவளுத்தரஞ் சொன்னாள்- அதை மங்கையர்செய்யுந் திருச்சாழல் விளையாட்டாக மகிழ்ச்சியினாலே அந்தப் பொருளையெடுத்துப் பாடலாகச்சொன்னார் மாணிக்கவாசகர்—எ-று. (௮௬)

ஈழமன்னனுமஞ்செழுத்து மியம்பிநீறுபுனைந்தபின்......*
தாழநின்றடிமைத்திறத்தவ றாததொண்டினனாயினான்......*
சோழனும்புலியூரின்மன்னிய தொன்மையாளருமம்பலம் *
வாழ்கவென்றுதுதித்துநின்றெழில் வாதவூரனையேத்தினார் *

(இ-ள்) ஈழராஜனும், அஞ்செழுத்துஞ்சொல்லி-விபூதி தரித்தபின்பு தாழநின்று அடிமைத்திறத்திலே தவறில்லாத அடியனானான்-சோழராஜனும்-தில்லைமூவாயிரவரும்-அம்பலம் வாழ்கவென்று துதித்து-அழகிய மாணிக்கவாசகரை யேத்தினார்கள்—எ-று. (௮௭)

தக்கசீர்ப்பயிலீழமன்னுயர் சைவனாயெதிர்நின்றுநீள்... ...*
றக்கமாலைபுனைந்துநீறு மணிந்துதொண்டினனாகவே... ...*

துக்கமாகிடசீவரத்துவ ராடைமூடுருடம்பினர் ... ...*
மிக்ககாதரமூனைதீர்ந்திடல் வேண்டுமென்றுவணங்கினர் . *

(இ-ள்) நக்கதாகிய சிறப்புள்ள ஈழராஜனும் - மாணிக்கவாசக ரெதிரே நின்று ருத்திராட்சமணிந்து-விபூதிதரித்து- அடிமைத்திற முடையவனாகவே துக்கத்தைத்தருகின்ற சிவந்த சீவரவஸ்திரத்தால், மூடுமுடம்பையுடைய புத்தர் மிகுந்த ஊமைத்தன்மை தங்களுக்கு நீங்கவேண்டுமென்று வணங்கினர்கள் என்றவாறு. (௮௮)

இன்னவாறருள்செய்குவாயினி யெம்பிரானெனவன்புடன் *
பொன்னிருந்வளநாடனும்புலி யூருளாருமிறைஞ்சினர்...*
மன்னுசீரடியனைவாதவூரர் மகிழ்ந்துபார்வையையநலகவே... *
முன்னதாகவணங்கியபவர் மூமை தீர்ந்திதுகூறினர்......*

(இ-ள்) இந்தப்படி அருள்செய்வாய்- எமதுடைவுளேயென்று அன்புடனே சோழராசனுந்-தில்லைமூவாயிரவரும்- மற்றவரும்வணங்கினர்கள் நிலைபெற்ற சிறப்பினையுடைய மாணிக்கவாசகர் மகிழ்ந்து- கிருபாநோக்கஞ்செய்ய வுடனே அவர்களெல்லாம் நமஸ்கரித்து-ஊமைத்தன்மைநீங்கி இதுசொன்னர்கள்—எ-று. (௮௯)

மாசிலாதமனத்திலர் முன மன்னுதீவினைசெய்தலா .. ...*
லாசிலாதநன் னீறணிந்து நலஞ்செழுத்துரை செய்திலேம் *
பூசலாகியநீறுடல்புனை யக்கமாலைகள்காவியார்... ... *
ஆசதாதுவராடையைச்சுடு வென்றுதூன்றிவணங்கினர் .. *

(இ-ள்) களங்கரகிதமான மனமுள்ளபெரியவரே? முன்பிறப்பிலே நிலைபெற்ற தீவினைச்செய்தபடியால்,குற்றமற்ற விபூதிதரித்து நல்ல பஞ்சாக்ஷரத்தை உச்சரியாமலிருந்தோம்-பூசுவதாகிய திருநீறுந் தரிக்கப்பட்ட ருத்திராட்சமும், காவிவஸ்திரமும்,ஆகிய இவைகளெல்லாங் கொடுப்பீர் இந்தச்சிவப்பு வஸ்திரத்தைச் சுடுவீரென்று வணங்கினர்கள்-எ-று.

கோட்டமின்றி வுன்னமையார்வகை கோட்டுகின்றமுகத்தரா *
மீட்டுமுன்செய்தவத்தினரிவ ரென்றசிந்தையிலெண்ணியே
வாட்டருந்திருநீறணிந்து வயங்குருத்திரசாதனம் ... *
பூட்டியர்க்கவர்சீவரங்கிளர் பொங்குதீக்கிரையாக்கினர் ... *

(இ-ள்) அழுக்காறில்லாத மாணிக்கவாசகர்- புன்சிரிப்புடைய முகத்தினராய்ப் பூர்வசன்மத்தி லிவர்கள் தவஞ்செய்தவர்களென்று மனத்திலே நினைத்துக் கெடுதல்செய்யாத விபூதிதரித்துப் பிரகாசங்கொண்ட ருத்திராட்சமும் அணிவித்து-அவர்களுடைய சீவரமாகிய வஸ்திரங்களைக் காந்தியையுடைய நெருப்புக்கு இரையாக்கினர்—எ-று. (௯௧)

பொய்யிலாவருளையரும்புலியூருளார்களுமன்புசேர் ... *
மையலாகியவேடமின்றிவயங்குநீறணிவார்களும் ... *
துய்யகாவிரிநாடனுந்துகடீருமீழர்தமன்னனுஞ் ... *
செய்யமாமணிமன்றுளார்திருமுன்புசென்றுவணங்கினர் *

(இ-ள்) பொய்ம்மையில்லாதகிருபையையுடையமாணிக்கவாசகருந்தில்லைமூவாயிரவரும், அன்புசேர்ந்தமயக்கமாகியவேஷமில்லாமல் பிரகாசம்பொருந்திய விபூதிதரித்தவர்களும், பரிசுத்தமாகிய காவேரிநாட்டையாளுகின்ற சோழராஜனும், குற்றம்நீங்கிய ஈழதேசத்தரசனும், சிவந்தரத்திநமிட்டிழைத்த கனகசபையிலிருக்கும் சபாநாயகரைநேராகவந்து தெரிசித்தார்கள்-என்றவாறு. (௯௨)

பொன்றுகின்றதுமுத்தியென்றுபுகன்றுநின்றுழல்புத்தர்தா *
மன்றுகண்டுவணங்கியன்புடன்மாபெருந்தவராவதே ... *
யின்றிதன்பொருளாவதென்பலவாறுடன்கடன்மீதிலே ... *
சென்றதண்புனலல்லவோவுயர்தில்லையெல்லையினண்ணினர் *

(இ-ள்) இறக்கின்றதே மோட்சமென்று சொல்லிநின்று உழலுகின்ற பௌத்தர்கள் பொன்னம்பலத்திலே சபாநாயகரைக்கண்டுவணங்கி, அன்புமிகுந்தபெரியதபோதனர்களாவது என்ன அதிசயம் இன்று இதனது பொருளானதென்னவெனில், பலநதிகளுடனே கடலிலேபோனகுளிர்ந்த நீரல்லவா? உயர்ந்ததில்லைமாநகரத்தில்வந்தவர்களென்றவாறு. (௯௩)

மன்றதன்றனின்யாவருஞ்செல்வாதவூருறையெந்தையார் ... *
சென்றிலங்குதிருப்புலீசர்சிறந்தபாதம்வணங்கியே ... ... *
நன்றிதுன்றியவங்கண்வைகினர்நல்லதில்லையுளாரெலா ... ... *
மென்றமிழ்க்கிருமையர்நீரினியென்றதம்மனையேகினர் ... *

(இ-ள்) சபையைவிட்டுநீங்கியபின்பு எல்லாருந்தங்களிடத்திற்குச்செல்ல, மாணிக்கவாசகர்திருப்புலீச்சரத்திலிருக்குங்கடவுளுடைய சிறந்ததிருவடிகளைவணங்கி, அங்கேயிருந்தனர் நன்மைபொருந்திய தில்லைமாநகரத்தாரெல்லாம் எந்நாளும் ஐயரே, நீர்இங்கேஇருமென்று வேண்டிக்கொண்டு தங்கள்கிரகத்துக்குப்போனார்களென்றவாறு. (௯௪)

பொன்னிநாடனுமீழநாடுபுரந்தமன்னனுமன்புசேர் ... *
மன்னுதீவினைதீரமன்றுவணங்குநீறணிவார்களு ... ... *
முன்னதாகவிறைஞ்சிஞானமுதிர்ந்தகோவையகன்றுபோய் *
மின்னுமாமணிமாடமாளிகைதன்னிலன்புடன்மேவினர் ... *

(இ-ள்) காவேரிநாட்டையாளுகின்றசோழராஜனும், ஈழதேசத்துராஜா
னும், வந்தராஜாக்களுக்கும், முன்புசேர்ந்திருந்த தீவினைகளெல்லாம் நீங்
கிச் சடையையுடையவனை, விபூதிதரித்தபுத்தர்களும், முன்னதாகவணங்கி
மாணிக்கவாசகரை நீங்கிப்போய் பின்னுகின்றரத்திநங்கள்பதித்த உப்பரி
கையில் அன்புடனேசேர்ந்தாரென்றவாறு. (௯௫)

புன்மைவேடமகன்றநீறுபுனைந்துவார்களுமன்னனுந் ... *
தொன்மையார்திருவாதவூரர்துலக்குபாதம்வணங்கியே ... *
நன்மையாமணிமன்றிறைஞ்சிநயந்துநெஞ்சினில் வஞ்சமாம்
வன்மையானதொழிந்துநிலைதமன்னுறுமாளிகையினர்...*

(இ-ள்) இழிவானவேடங்கள்நீங்கி விபூதியைத்தரித்தபுத்தர்களும், ரா
ஜாவும், பழமையாயுள்ள திருவாதவூரராகிய அழகிய திருச்சிற்றம்பலத்
தைவணங்கி, நயப்புடனே நெஞ்சிலேயிருக்கும் வஞ்சகம்நீங்கிச் சிதம்
பரமேதங்களுக்கு நிலைபெற்றபதியாகவிருந்தார்களென்றவாறு. (௯௬)

புத்தனைவாதில்வென்றசருக்க முற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௫௯௬.

திருவடிபெற்றசருக்கம்.

(வேறு.)

உடன்படப்பொய்யைமெய்யாவுரைத்திடுஞ்சமயமென்னுந் *
தடங்கயத்திரளைவெல்லுந்தனிப்பெருமடங்கலன்னார்... ...*
நெடுந்தவப்பெருமையாலேநினைப்பருஞ்சைவஞான... .. *
விடம்புடைப்புகல்வார்பின்னெய்தியசெய்திசொல்வாம் ... *

(இ-ள்) உடன்படும்படி பொய்யைமெய்யாகச்சொல்லிய பரசமயத்தை
யென்னும் யானைக்கூட்டத்தைவெல்லுகின்ற ஒப்பற்ற பெரியசிங்கவே
ற்றுக்கொப்பாகியவரும், நெடியதவத்தின்பெருமையாலே நினைத்தற்க
ரிய சிவஞானத்தைவிரித்துச்சொல்லப்பட்டவருமாகிய மாணிக்கவாசகர்
பின்பு அடைந்தசெய்தியைச்சொல்லுவாம்-என்றவாறு. (௧)

ஆடல்வெம்படையினுட்சியெழுச்சியோடசோவென்னும்*
பாடலுந்தெய்வலோகயாத்திரைப்பத்துமோதித்....... ...*
தேடலுந்திகைப்புமீளத்தெளிதலுஞ்சிறுமைகொண்டு ... *
நாடலுங்களிப்புமில்லாறற்பெருவாழ்விலானர் ....*

(இ-ள்) ஆடலையுடைய திருப்படையாட்சியும், திருப்படையெழுச்சியும், அச்சோபத்தும், தெய்வலோக யாத்திரைப்பத்தும் பாடி, ஒன்றைத்தேடுதலும், திகைத்தலும், பின்பு தெளிதலும், சிறுமைகொண்டு வாடுதலும், களித்தலுமில்லாத பெரியவாழ்வு பெற்றிருந்தார் மாணிக்கவாசகர்-எ-று. (௨)

போற்றுமஞ்செழுத்துநீறும்புவியிலைசவிளங்கத்துன்ப ...*
மாற்றிநின்சைவஞானவாசகம்புகலவந்தார்.. ... .*
சீற்றமில்புலிபும்பாம்பஞ்சீர்பெறவிளங்குமன்றி ......*
லேற்றினன்புலியூர்மேலைச்சிவபதமென்றுகண்டார் ...... *

(இ-ள்) யாவரும் போற்றுகின்ற பஞ்சாக்ஷரமும், விபூதியும், பூமியிலேவிளங்கத் துன்பத்தை நீக்குகின்ற சிவஞானத்தை விதிக்குந் திருவாசகஞ்சொல்லவந்த மாணிக்கவாசகர் கோபமில்லாத வியாக்கிரபாதரும், பதஞ்சலியாரும், சிறப்புப்பெற விளங்குகின்ற பொற்சபையிலாடும் இடபவாகனத்தையுடைய சபாபதியினது சிதம்பரம் மேலான சிவபதமென்றுகண்டார்-எ-று. (௩)

அய்யரக்குறையுநாளிலாடகமன்றிலாடு................ ......*
மெய்யர்தங்கருணையாலேவேதியவடிவங்கொண்டு... ...... *
துய்யமுப்புரிநூன்மார்புந்துலக்குபுத்தகமுந்தோன்றச் *
செப்பமென்பாதநோவச்சென்றுமுனுகநின்றார்... ... ...*

(இ-ள்) மாணிக்கவாசகர் அந்தச்சிதம்பரத்தில் வசிக்கின்ற நாளிலே பொற்சபையிலாடுகின்ற சபாபதியானவர் தமதுகிருபையினாலே பிராமணவடிவங்கொண்டு பரிசுத்தமாகிய முப்புரிநூலணிந்தமார்பும், விளங்குகின்ற புஸ்தகமுந்தெரியச் சிவந்ததிருவடிகளும், நோக எழுந்தருளி எதிராகநின்றார்-எ-று. (௪)

முன்புறநின்றவேதமுதல்வனைமுகத்திநோக்கி...... ... ...*
யின்புறவாதவூரரிருமெனவிருந்தபின்னர்... ....*
கொன்புனைமறையின்மிக்கீரெங்குளீர்கூறுமென்ன..........*
மன்பெருவளஞ்சேர்பாண்டிமண்டலத்திருப்பேனென்றார் *

(இ-ள்) எதிரேவந்துநின்ற வேதப்பிராமணனைப்பார்த்து இன்பம் பொருந்த மாணிக்கவாசகரிருமென்றுசொல்ல, அவரிருந்தபின்பு பெருமையையுடைய வேதத்தில்மிகுந்தவரே? நீரெங்கேயிருக்கிறது சொல்லுமென்றுகேட்க; விலைபெற்ற பெரியவளத்தையுடைய பாண்டியதேசத்திலே நாமிருக்கிறதென்றார் அந்தப்பிராமணரென்றவாறு. (௫)

பாண்டிநாடென்றபின்னர்ப்பரிவுடன்செறிவுகூறி......'...*
மீண்டுநீர்வருதல்வேண்டுங்காரியமியம்புமென்ன...... ...*
வாண்டநாயகன்றனாணையாகியகருமந்தனைக்..............*
காண்டலேயென்றபின்னுங்கருத்துறவிதனைச்சொன்னார்...*

(இ-ள்) பாண்டியதேசமென்று சொன்னபின்பு அன்புடனே உபசரித்து இங்கே நீர்வருதற்குக்காரணஞ்சொல்லுமெனக் கடவுளது ஆக்கினையாகியகாரியம் உம்மைக்காணுவதேயென்று பின்னும் மனத்திலேபொருந்த இதைச்சொன்னாரென்றவாறு. (௬)

மண்ணிடைப்புகுந்துமேலைவானிடைப்பறந்துமுன்னர்க்---*
கண்ணனுமயனுந்தேடிக்காண்பதற்கரியார்தம்மைப்... ...*
புண்ணியமன்றிலாடும்புனிதனைப்பரியிலேறப்...... ......*
பண்ணுநும்பெருமையாலேவாழ்ந்ததுபாண்டிநாடு... ...*

(இ-ள்) பூமியைப்பிளந்தும், ஆகாசத்திற்பறந்தும், முன்னேமகாவிஷ்ணுவும், பிரமதேவனுந்தேடிக் காணுதற்கரியக் கடவுளாகியும், சிற்சபையிலே நிருத்தஞ்செய்பவருமாகிய பரமசிவனைக் குதிரைமேறச்செய்த உம்முடைய பெருமையினாலே பாண்டிநாடெல்லாம் வாழ்ந்ததென்றவாறு. (௭)

தென்பெருந்துறையிலையன்றிருவடிசேவைசெய்து... ...*
துன்பமொன்றின்றிவாவிசூழ்கழுக்குன்றிற்சென்று ... ...*
பொன்பொலிமன்றிலெய்திப்புத்தனைவாதில்வென்றீ......*
ரென்பதுகேட்டுப்பின்னரியாவருமகிழ்ச்சிகொண்டார்.... ...*

(இ-ள்) அழகிய திருப்பெருந்துறையிலெழுந்தருளியிருக்கின்ற கடவுளுடைய திருவடியைவணங்கித் துன்பமொன்றுமில்லாமல் தடாகஞ்சூழ்ந்த திருக்கழுக்குன்றத்திற்குப்போய்ப் பின்பு சிதம்பரத்திற்குவந்து புத்தனைவாதுசெய்து வென்றீரென்பதைக் கேள்விப்பட்டு யாவரும் மகிழ்ச்சியடைந்தாரென்றவாறு. (௮)

ஆதியைமன்றுளாடுமையனையன்பினாலே........... ......*
ஓதியதமிழின்பாடலுள்ளவையோதவெண்ணி... ... ...*
மாதுயரகலவிங்குவந்தனனெழுதல்வேண்டும்...... ......*
வேதியர்பெருமானின்றுவிளம்பிடவிளக்கவென்றார்... ...*

(இ-ள்) ஆதியாகியும் சிற்சபையிலே ஆடுகின்ற ஐயனாகியுமிருக்கின்ற கடவுளைப் பத்தியினாலே நீர்சொல்லிய தமிழ்ப்பாடல் முழுவதும் ஓதுதற்குநினைத்து துன்பம்நீங்க இங்கேவந்தேன் அது எழுதல்வேண்டும்

பிராமணரில் உத்தமரேவிளக்கமாக இன்றுசொல்லவேண்டுமென்றார் அந்தப்பிராமணரென்றவாறு. (௯)

விண்ணகம்பரவுநாதனிவ்வகைவிளம்பச்சிந்தை .... *
நண்ணுமன்புடையராகிநற்சடைமுடியார்தம்மை ... . *
யெண்ணருந்தமிழின்பாட்டாலியம்பியவையப்போ .. ... *
துண்ணெகிழ்ந்துளமெய்ஞ்ஞானவாசகமுவந்துசொன்னார் *

(இ-ள்) தெய்வலோகத்திலுள்ள தேவர்கள்வணங்குகின்ற சபாநாயகர் இவ்வாறுசொல்ல மனத்திலே மிகுந்த அன்பையுடையவராய் ஜடாமுடியையுடைய பரமசிவனை யெண்ணுதற்கரிய தமிழ்ப்பாடலாற் சொல்லிய மாணிக்கவாசகர் அப்போது அகமலர்ந்து உண்மைஞானத்தைத்தருகின்ற திருவாசகத்தை மகிழ்ச்சியுடனே சொன்னாரென்றவாறு. (௰)

அங்கவருரைத்தவெல்லாமம்பலத்தாடுமையர் .... *
செங்கையிலேடுவாங்கித்தெளிவுறவரைந்தபின்னர் ... ... *
பொங்கியவருளினுருப்புகன்றிடரகலத்தையல் .... *
பங்கினர்தம்மைக்கோவைபாடுதல்வேண்டுமென்றார் .... *

(இ-ள்) அவர்சொல்லிய பாடலெல்லாம் சிற்சபையிலாடுஞ் சபாபதியானவர் தம்முடைய திருக்கரத்தில் ஏட்டைப்பிடித்துக்கொண்டு தெளிவாக எழுதியபின்பு மிகுந்த அருளையுடைய மாணிக்கவாசகருஞ்சொல்லித் துன்பநீங்க உமாதேவி பாகராகிய சபாநாயகரைப் பாட்டுடைத்தலைவனுவுடைய ஒருகோவை பாடல் வேண்டுமென்றார் அந்தப்பிராமணர்-எ-று. (௰௧)

மன்னியதவத்தின்மிக்காரதற்குளமகிழ்ந்துகூற...... ...... *
முன்னுறவிருந்துகோவையெழுதினர்முடிந்தபின்னர்ப்... *
பொன்னவிர்வேணியார்தாம்புத்தகஞ்சேமித்தக்கண்...... *
மின்னெனமறைந்தார்சொன்னவித்தகரயர்ச்சிகொண்டார் *

(இ-ள்) நிலைபெற்றதவத்திலேமிகுந்த மாணிக்கவாசகர் அதற்கு மனமகிழ்ந்துசொல்ல எதிரேயிருந்து திருக்கோவையாரெழுதி முடிந்தபின்பு பொன்போலும் பிரகாசிக்குஞ்சடையையுடையவர் தம்முடையபுத்தகத்தைக்கட்டி அவ்விடத்திலேகொண்டு மின்னலைப்போல் மறைந்தார் அதுகண்டு மாணிக்கவாசகர் விருத்தங்கொண்டார்—எ-று. (௰௨)

எழுந்தனரொங்குமோடிநாடினரெங்கொலென்று....... .. *
வழிந்தனர்மன்றுளாடுமாதியென்றறிந்தபின்னர்....... .. *

பொழிந்தனர்கண்ணீ ரெங்கேபோயினையென் றுமண்மேல் *
விழுந்தனர்பரமானந்தவேலைவெள்ளத்துளாழ்ந்தார் ... . *

(இ-ள்) எழுந்தார்-எங்குமோடித் தேடிப்பார்த்தார்- இதென்ன ஆச்சரியமென்று மனமழிந்தார்-சிதம்பரத்திலே நிருத்தஞ்செய்கின்ற சபாபதியென்றறிந்து பின்பு கண்ணினாலே ஆநந்த பாஷ்பம் பொழிந்தார்- எங்கேபோயினையென்று பூமியிலேவிழுந்தார்- பரமாநந்த சமுத்திரநீரிலழுந்தினா ரென்றவாறு. (௰௩)

செந்தமிழ்க்கன்புமிக்கார் சென்றுதம்மன்றி லெய்தி ... .. *
யந்தாத்தவனைமாலையயனை நன்முகத்து நோக்கி...... .... *
நந்தமக்கடிமைபூண்டுநயந்தவ ரொருவன்சொன்ன ... ... *
விந்தநற்பாடல்கேண்மி னென்றவர்க்கருளிச்செய்தார் ... *

(இ-ள்) உயர்ந்ததமிழினிடத்திலே அன்புமிகுந்தசபாநாயகர் புத்தகத்தையெடுத்துக்கொண்டு தமது சபைக்கெழுந்தருளித் தேவர்களையும்- மகாவிஷ்ணுவையும்-பிரமதேவனையும்பார்த்து நமக்கடிமைசெய்து நயப்பினைப்பெற்ற மாணிக்கவாசகர்சொன்ன இந்தநல்லபாடல்களைக்கேளுங்களென்று அவர்களுக்கனுக்கிரகஞ்செய்தார்-எ-று. (௰௪)

மெய்த்தவவாதவூரர்விளம்பிடவெழுதுமிந்தப் .... *
புத்தகமன்றுளாடல்புரிந்தவனெழுத்தாமென்று ....*
முத்தியையுதவுங்கோவைமுடிவிடத்தெழுதிப்பின்னர் ... *
சித்திரமலர்க்கையாலேதிருந்தமைக்காப்புஞ்செய்தார் ... *

(இ-ள்) மெய்ம்மையுள்ள தவத்தையுடைய மாணிக்கவாசகர் சொல்லவெழுதப்பட்ட இந்தத்திருவாசகம் கனகசபையிலே நிருத்தஞ் செய்கின்ற அழகிய திருச்சிற்றம்பல முடையார் திருவெழுத்தாமென்று மோட்சத்தைத் தருகின்ற திருக்கோவையார் முடிந்தவிடத்திலே யெழுதிப் பின்பு அழகிய மலரையொத்த கையினாலே திருத்தமாக மைக்காப்பஞ் செய்தாரென்றவாறு. (௰௫)

வெண்பிறைமுடித்தவேணிவித்தகருலகுக்கெல்லா ... . *
நண்புடைவாதவூரர்நற்றவமுணர்த்தவெண்ணி...... ......*
பெண்பெறுமுனிவர்விண்ணோரிறைஞ்சுமம்பலத்துவாயில் *
வண்படிமீதேயுண்மைவாசகமுறையைவைத்தார்........ ...*

(இ-ள்) வெள்ளிய மூன்றாம்பிறையைத்தரித்த ஜடாபாரத்தை யுடைய

சபாநாயகர் உலகத்துக்கெல்லாம் இனிமையுடைய மாணிக்கவாசகர் தூநல்லதவத்தை யெல்லாருக்கும் அறிவிக்கநினைத்து எண்ணைப்பெற்ற முனிவர்கள் தேவர்கள் வணங்கும் சபைவாசற்படியின்மேல் திருவாசகமாகிய திருமுறையைவைத்தாரென்றவாறு. (௰௬)

வைத்தபின்பூசைசெய்யுமந்தணன்வந்துகண்டிப் ......*
புத்தகமிங்குறநண்ணும்புதுமைதெய்விகமாமென்று ....*
சித்தமங்குருகிநின்றுதில்லையுள்ளவர்கட்கெல்லா ....*
மித்திறக்கூறலும்வன்றிமென்றுமன்றகன்றுபோந்து......*

(இ-ள்) படியின்மேல்வைத்தபின்பு பூசைசெய்யும் ஒருபிராமணன் பார்த்து இப்புத்தகம் இங்கேயிருக்கும்புதுமை தெய்விகமாமென்று மனமுருகிநின்று தில்லைமாநகரத்தார்க்கு இதனைச் சொல்லவேண்டுமென்று சபையைவிட்டுப்போயென்றவாறு. (௰௭)

செந்திருமருவுந்தொல்லைத்தில்லைநன்நகரினுள்ளார்........*
தந்திருமுன்புசென்றுசாற்றிஞரிந்ததீர்மை ....*
யந்தணர்பெருகிநந்தமின்னரதிசயமிதுவென்றோடி ....*
வந்தனர்படிமேலன்னல்வைத்தபுத்தகங்கண்டார்கள்.....*

(இ-ள்) இலக்குமியானவள் வசிக்கின்ற பழைமையாகிய சிதம்பரத்தினுள்ளவர்களிடத்துக்குப்போய் ஒரு புத்தகம் சபையின் படியின்மேலேயிருக்கின்றதென்று சொல்லப் பின்பு இது அதிசயமாமென்று ஓடிவந்து படியின்மேல் சபாநாயகர்வைத்த புத்தகத்தை எல்லாருங் கண்டார்களென்றவாறு. (௰௮)

யாவருந்தம்முணுடியெம்மிறையுறையுமன்றுட்....... .....*
மேவரும்புகுதவொண்ணுத்தெய்விகமிதுவென்றெண்ணி...*
மேவுடன்பதனலன்னிலவிளம்பியசைவநூலோ ... .*
தாவுசெந்தமிழோவென்றுபார்ப்பதுதக்கதென்றார்... ...*

(இ-ள்) எல்லாருந்தங்களுக்குள்ளேபார்த்து எமதுகடவுளிருக்கின்ற சபையிலே தேவர்களும்புகுதற்குக்கூடாத தெய்விகமிதுவென்று நினைத்துப் பொருந்துகின்ற அன்பினால் கடவுள்சொல்லிய சிவாகமமோ தமிழ்நூலோவென்று பார்ப்பதுதகுதியாமென்றார்கள்-எ-று. (௰௯)

தேக்கியவன்றுருமன்புஞ்சிறந்தவரெல்லாஞ்சொல்லும்......*
வாக்கினிலொருவன்சென்றுமலர்கொடுவணக்கஞ்செய்து *

பூக்கம்ழ்சடையோன்வைத்தபுத்தகந்தன்னைசேம... ... ...*
.நீக்கினோரதிஞர்மூனீதிகொளகவலுன்கும்... ... .*

(இ-ள்) அருளும் அன்பும் நிறைந்த தில்லை மூவாயிரவர்களெல்லாருஞ் சொல்லுகின்ற வாக்கில் வல்லவராகிய ஒருவர்போய் மலனாக்கொண்டு அருச்சித்து நமஸ்கரித்துப் பரமசிவன்வைத்த புத்தகத்தை அவிழ்த்து ஏட்டைநீக்கிப் படித்தார் நீதியைக்கொண்ட அகவல் நான்கும்-எ-று. (உ௰)

[வேறு]

திருச்சதகமுதலாகச்சிறந்ததமிழறு நூறும்...... ....*
விரித்தவகப்பொருட்கோவைவிளங்கவொருநானூறு... ...*
முனைத்தலர்பின்முடிந்தவிடத்துயர்வாதவூரன்மொழி ...*
நரித்தெழுதமைப்பலவனெழுத்தென்றுசாற்றினர்... ... ...*

(இ-ள்) திருச்சதகமுதலாகச் சிறக்கப்பெற்ற தமிழ்ப்பாடல் அறுநூறும் விரித்துச்சொல்லப்பட்ட அகப்பொருட்கோவை நானூறுபாடலும் விளக்கப்படித்தார்கள் பின்பு அதுமுடிந்தவிடத்திலே இது மாணிக்கவாசகர்சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் கையெழுத்தென்று படித்தார்களென்றவாறு. (உக)

கேட்டவர்களெல்லாருங்கிளர்புளகங்குறுவேர்வு.............*
காட்டிடவுங்கண்ணீருங்கசிந்துருகுஞ்சிந்தையுமா .... *
மீட்டியமெய்த்தவமுடையோனியம்பியவித்தமிழன்றி ... *
வீட்டுநெறிக்கினிச்சிவநூல்வேறுளதோவென்றார்கள்... ...*

(இ-ள்) இந்தத்திருமுறையைப்படிக்கக் கேட்டவர்களெல்லாம் மெய்ப்புளகமும் குறுவேர்வுகொள்ளுதலும் ஆனந்தபாஷ்பமும் கசிந்துருகுமனமுங்கொண்டவராய் மெய்த்தவத்தையுடைய மாணிக்கவாசகர் சொல்லிய இந்தத்தமிழல்லாமல் மோட்சவழிக்குச்சிவநூல் வேறுண்டோவென்றுசொன்னார்களென்றவாறு. (உஉ)

பூணரவன்திருநாமம்புகழுமருந்தவர்சொல்ல... ... .*
யாணரிதன்பொருட்டேனையின்றுணர்வோமென்றெண்ணி *
மாணுடைமன்றகஞ்சேர்மறைவல்லார்போதிநீழல்....... ...*
வீணருடன்பெருவாதுவென்றவர்முன்செனறார்கள் ......*

(இ-ள்) சர்ப்பாபரணந்தரித்த சபாநாயகனைப் பாடிய மாணிக்கவாசகர்சொல்ல அழகிய இதன்பொருளாகிய தேனை இன்றறிவோமென்றுநி

னைத்துப் பெருமைபொருந்திய சபையைவிட்டுப் போய் அரசமரநீழ
லிலேயிருக்கும் வீணராகிய புத்தருடன் பெருவாதுசெய்துவென்றமா
ணிக்கவாசகர் முன்னேபோனார்கள் தில்லைமூவாயிரவரென்றவாறு.(உ௩)

சென்றவர்தந்திருமுன்பு திருமுறைவைத்தண்டர்பிரா... *
னின்றுசெயுஞ்செயலிதுவென் றியம்பினர்நின்றெல்லோரு
மென்றுமன்புன்பாட லுவந்தருளப்புவிமீதி... ...*
லன்றுசெயுந்தவமறியே னென்றழுதாரன்பாளர் ... *

(இ-ள்) இப்படிப்போனவர்கள் அவரெதிரே திருமுறையைவைத்துத்
தேவர்பிரானாகிய கடவுள் இன்றுசெய்தகாரியம் இதுவென்றுசொன்னா
ர்கள்-அதுகண்டு எல்லாரும் அற்பமாகிய என்பாடலை மனமகிழ்ந்துகொ
ண்டருளப் பூமியிலே அன்று செய்த தவத்தை யறியமாட்டேனென்றார்
மாணிக்கவாசகரென்றவாறு. (உ௪)

புண்ணியரிக்கிவ்வாறு புலம்பியபின்புலியூரி ... ... *
லெண்ணருமன்புடையார்க ளிதமுடனஞ்சலிசெய்து ... *
பண்ணுலவுஞ்செஞ்ஞானப் பாடல்கொளும்படி நம்பா... *
னண்ணுமரன்செய்ததென்னீர் நவிலுமெனச்சொன்னார்கள்

(இ-ள்) மாணிக்கவாசகர் இங்கே இப்படி புலம்பி அழுதபின்பு சிதம்
பரத்தி லிருக்கின்ற அளவற்ற அன்புடையவர்கள்-இதத்துடனே அஞ்ச
லியஸ்தராய்ப் பண்ணையுடைய ஞானப்பாடலைக் கொள்ளும்படி உம்மி
டத்தில்,கடவுள்வந்து செய்தகாரியமென்ன சொல்லுமென்று கேட்டார்
களென்றவாறு. (உ௫)

அல்லலெனும்பிறவியிலா ரண்ணல்செயுஞ்செயல்யாவுஞ் *
சொல்லியபின்புலியூரர் தொழுதுமனங்களிகூர்ந்து ... *
தில்லையிலெம்பெருமானைச் செப்பியவித்தமிழ்மாலை ...*
நல்லவரும்பொருள்கூற வேண்டுமென நவின்றார்கள்... *

(இ-ள்) துன்பமெனினும் பிறப்பில்லாத மாணிக்கவாசகர் சபாநாயக
ர்செய்த செய்கையெல்லாஞ் சொன்னபின்பு தில்லைமூவாயிரவர் வணங்
கி மனமகிழ்ச்சிகொண்டு சிதம்பரத்திலிருக்கின்ற எமதுகடவுளைச் சொ
ல்லிய இத்தமிழ்ப் பிரபந்தத்திற்கு அருமையாகிய நல்லபொருள்சொல்
லவேண்டுமென்று கேட்டார்களென்றவாறு. (உ௬)

ஓங்குபுகழ்திருவாத வூருறையும்பெருமானுந் ... ... *
தேக்கியமெய்ச்சிவஞானச் சிந்தையுடன்களிகூர்ந்து ...*
பூங்கனகப்பொதுவெதிரே போய்ப்பகர்வேனெனப்போக
வாங்கவர்முன்சென்றாரு மன்பொடுபின்சென்றார்கள்... *

(இ-ள்) கீர்த்தியிலுயர்வுபெற்ற திருவாதவூரிலே திருவவதாரஞ்செய்த மாணிக்கவாசகர் சிவஞானநிறைந்த மனத்துடனே களிப்பையடைந்து அழகிய கனகசபையெதிரேபோய் இதற்குப்பொருள் சொல்லுவேனென்றுபோக அவர்முன்னேபோனவர்கள் அன்புடனே அவர் பின்னே போனார்க ளென்றவாறு. (உஎ)

நின்றபுகழ்ப்புலியூர் நேசமுடன்புடைசூழ... ... *
சென்றருளுக்கிடமான செம்பொனினம்பலமெய்தி ...*
பொன்றியவித்தமிழ்மாலைப் பொருளிவனென் றுலாசெய்து*
மன்றதனிற்கடிதேகி மறைந்தனரங்கவர்காண... ... *

(இ-ள்) நிலைபெற்ற கீர்த்தியையுடைய சிதம்பரத்திலேயுள்ள தில்லைமூவாயிரவர்கள் அன்புடனே புடைசூழ்ந்து வரப்போய் கிருபைக்கிடமாகிய கனகசபையையடைந்து பொருந்திய இத்தமிழ்ப் பிரபந்தத்திற்குப்பொருள் இவர்தாமென்று சபாநாயகனைக்காட்டிச் சபையிலே தில்லைமூவாயிரவர்கள்காணச் சீக்கிரத்திற்போய் மறைந்தார் மாணிக்கவாசகரென்றவாறு. (உஅ)

செய்காட்டுங்கமுகடவித் தில்லையுளார்பொருள்கேட்கக் ... *
கைகாட்டித்தம்முருவங் காட்டாமன்மறைந்தானைப் ... *
பைகாட்டும்பேரரவப் பணியுடையார்தமக்கன்பு... ...*
மெய்காட்டிப்பாலுடனே மேவியநீராகினார் ... ... *

(இ-ள்) கமுகமரக் காட்டையுடைய வயல்சூழ்ந்த தில்லைமூவாயிரவர் பொருள்கேட்கச் சபாபதியைப் பொருளென்று கையாற்காட்டித் தமது திருவுருவைக்காட்டாமல் படமுள்ள பெரியசர்ப்பாபரணத்தையுடைய கடவுளானவர் தமக்கு அவர்செய்த அன்பின் மெய்ம்மையைக் காட்டிப் பாலுடனே பொருந்திய நீர்போலாகினார்—எ-று. (உகூ)

(வேறு.)

அண்டனையண்டர்கோனை யன்பினொப்புமாறு ... ...*
கண்டனர்புளகமெய்திக் கம்பிதமாகிநின்று ... ... *

வீண்டனர்கசிந்துசிந்தை வேர்த்தனர்மேனியெங்கும் ... *
கொண்டனர்மகிழ்ச்சி செங்கை குவித்தனர்தில்லையுள்ளார் *

(இ-ள்) தேவனாகியும், தேவர்க்கு அரசனாயு மிருக்கின்ற சபாபதியை மாணிக்கவாசகர் அடைந்த விதமுங்கண்டார்கள்-தேகம் புளகமடைந்து நடுக்கமுற்றுத்-துதித்து- மனமுருகிக்- கண்ணீர்பொழிந்து- திருமேனியெல்லாம் வேர்த்தார்கள்- மனமகிழ்ந்தார்கள்-சிவந்த கைகளைச்சிரசின் மேல் கூட்டிக்கொண்டார்கள் - தில்லைமாநகரி லுள்ளார்க ளென்றவாறு.

(வேறு.)

பூதநடங்கடொடங்கினபோத மகிழ்ந்தனுறுங்கண ... *
நாதர்புகழ்ந்தனர்தும்புருநாரத ரின்னிசைகொண்டனர் .. *
வேதமோடந்தரதுந்துமிமீது முழங்கியெழுந்தன ... *
மாதவரிந்திரர்கடந்தருமாமலர் சிந்திவணங்கினர்... ...*

(இ-ள்) பூதங்களெல்லாம் நிருத்தஞ்செய்தன-மிகவுமகிழ்ந்து வந்த கணநாதர்கள் புகழ்ந்தனர்-தும்புருநாரதர் இசைசெய்தார்கள்- வேதங்களும், அந்தரதுந்துமிகளும், ஆகாசத்தில் முழங்கியெழுந்தன-முனிவரும் இந்திரரும், பஞ்சதருவினுடைய மலரைத்தூவி வணங்கினார்கள்—எ-று.

ஞானநடம்பயில்சங்கரனும மிருந்துளநெஞ்சினர்... ...*
மோனசுகந்தருடன்சிவபூசை முயன்றுநயந்தவ ... *
ஊனமிலன்புளதென்புலியூரி லுறைந்துசிறந்தவர்... ...*
வானகரும்பரவுந்திருவாசக வின்பநுகர்ந்தனர்... ... *

(இ-ள்) ஞானநாடகஞ்செய்கின்ற சபாநாயகருடைய திருநாமத்தைத் தியானிக்கின்ற நெஞ்சை யுடையவர்களும், மௌனமாய்ச் சுகந்தங்களுடனே சிவபூசையிலே செய்து முயன்றவர்களும், கெடுதலில்லாத அன்பையுடைய அழகிய சிதம்பரத்தில் வசித்துச் சிறப்புப் பெற்றவர்களும், தேவர்களும், பரவுகின்ற திருவாசகத்தமிழின்பத்தைப் புசித்திருந்தார்க ளென்றவாறு. (௯௨)

(வேறு)

ஊனமிகுந்துளதோலு மென்புநரம்புஞ்சீயு... ... ...*
மானவுடற்சிவரூப மாமிதனைத்தெளியாம ... ... *
ஊனுடலுக்கிரைதேடி யுழன்றலகிற்றடுமாறி ... ...*
மாநரகிற்புகுதுமதோ மாயைவலைப்படுவோர்கள் ... *

(இ-ள்) இழிவு மிகுந்துள்ள தோலும்-எலும்பும்-நரம்பும்- சீயுமான வுடல் சிவரூபமாகும்- இதனைத்தெளியாமல்,மாமிசபிண்டத்துக்கிரைதே

டி சஞ்சரித்து உலகத்திலே தடுமாறி-கொடிய நரகத்திலே புகுவது
ன ஆச்சரியம்-மாலையினுடைய வலையிலகப்படு மனிதர்கள்-எ-று.

(வேறு.)

வாதவூரந்தணர்தந்திருவாய்மை விளங்குதிருக்கதை ... *
யே துணரன்புடனெண்செவியூடு முகந்ததுகேட்டவர்... *
போதமெய்ஞ்ஞானமுறுஞ்சுகபோக முடன்புகழ்பெறுவர்க
டீதில்பவக்கடலைத் துயின்சேர்குவர் வண்சிவலோகமே *

(இ-ள்) திருவாதவூரில் திருவவதாரஞ்செய்த மாணிக்கவாசகருடை
ண்மைவிளங்கிய இந்தத் திருக்கதையைப் படித்தவர்கள்-அன்புடனே
தினுலே கேட்டவர்கள்-மிகுந்த உண்மைஞானம் பொருந்திய சுகபோ
த்துடன் கீர்த்தியும்பெற்றுப் பிறவிசாகரமொழிந்து பின்பு வளத்தை
டைய சிவலோகம் பெறுவார்களென்றவாறு. (௬

(வேறு.)

பூதலமாதும்வாழ்க பொங்குமழைபொழிந்துவாழ்க ... *
வேதவாகமமும்வாழ்க வேந்தர்செங்கோலும்வாழ்க... ...*
தீதிலஞ்செழுத்துநீறுஞ் சிவனடியாரும்வாழ்க ... ...*
வாதவூரிறைபுராணம் படித்திடக்கேட்டோர்வாழ்க ... *

(இ-ள்) பூமிதேவியும்வாழ்க, பொன்மாரி பெய்துவாழ்க, வேதாகமங்
களும்வாழ்க, அரசர்செங்கோலும்வாழ்க, குற்றமற்றப் பஞ்சாக்ஷரமும்-
பூதியும்-சிவனடியார்களும்வாழ்க, மாணிக்கவாசகருடைய புராணத்தை
படித்தவர்களுங்-கேட்டவர்களும்வாழ்க என்றவாறு. (௬

திருச்சிற்றம்பலம்.

திருவடிபெற்றசருக்க- முற்றிற்று.

ஆக சருக்கம்- எ- க்கு, திருவிருத்தம் - ௩௱௬௰.

திருவாதவூரர்புராணம் - முற்றிற்று.